

தமிழரசு
16-8-1992 ரூ. 1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்

ஆயத்த ஆடைகள்

கதர் பாலியஸ்டர்

பாப்டா

மற்றும் உல்லன்

**காதிகிராப்ட்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

குறளகம், சென்னை - 600 108.

# இந்த இதழில்...


வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா ... 2
வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மின்கலப் பேருந்து ... 8
கோவை மாவட்ட ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 9
படமும் செய்தியும் ... 10
'வெள்ளையனே வெளியேறு'— வீர வரலாறு ... 12
தருமபுரி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 16
இருபது அம்சத் திட்டம்— இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம்! ... 17
நூல் நயம் ... 18
நெஞ்சையள்ளும் குற்றாலம் ... 19
சரித்திரத்தில் பொறி பறந்த நேரம்! (கவிதை) ... 23
மானிடவியல் படிமங்கள் ... 24
வேளாண்மைப் பொறியியல் துறையின் சாதனைகள் .. 27
தோட்டக்கலைத் துறையின் சாதனைகள் ... 31
காந்திய நெறியில் கலைவாணர் ... 33
பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 39
அரசு ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள் ... 42
மாவீரன் பகத்சிங் ... 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆடித் திங்கள் -

மலர்: 23 இதழ்: 4

16-8-1992


## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

''வெள்ளையனே வெளியேறு'' இயக்கப் பொன் விழா நிகழ்ச்சியில், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். (9.8.1992).

நான்காம் அட்டை:

குற்றால அருவியின் எழில்மிகு தோற்றம்.

…ட்டிற்கு நேசக்கரம் நீட்டி,

## …ல் நாம் சூளுரை ஏற்போம்!''

…ம் ஒரு மாபெரும் …புணர்வோடு நினைவு … நமது விடுதலைக்கு … சந்திப்பதில், நான் …

…புரிமை - அது எங்கள் …ழக்கமிட்டு, எடுத்த … தியாகத் தழும்பேறிய …ரர்கள் பலர், இந்த …

### தனிச்சிறப்புக் கொண்டது

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நடந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று தொடங்கிய சுதந்திர வேள்வியின் பலனை, ஐந்தாண்டுகளிலே பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்து வருகின்றோம். நாடு விடுதலை அடைந்து 44 ஆண்டுகள் ஆயினும், விடுதலைக்கு வித் திட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை, மறவாமல் நினைவு கூர்கின்றோம். இந்த நினைவு நமது இரத்தத்தில், நமது சந்ததியினரின் உதிரத்தில், என்றென்றும் நின்று நிலைபெறத்தக்க, பெருமை

அதற்கு ஆதரவாக "என்றும் உ…

## சென்னை விழாவில் முதல்வர்…

மாக, நம் இதயச் சுவர்களில் எதிரொலிக்கின்றது. அதை நினைக்க நினைக்க, நம் நெஞ்சத்தில் விடுதலைக்கனல் கொழுந்துவிட்டு எரிவதை, இன்றும் நம்மால் உணர முடிகிறது.

### செய் அல்லது செத்து மடி!

"Everyone of you should, from this moment onwards, consider yourself a free man or woman, and act as if you are free and are no longer under the heel of imperialism. I am not going to be satisfied, with anything short of complete freedom.

Do or die. We shall either free India or die in the






**தனி உரிமை கொண்டாட முடியாது!**

நாட்டின் விடுதலை, தேசபக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். ஒவ்வொரு இந்தியருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. எனவே எந்த ஒரு தனிப்பட்ட இனத்தினரோ, மதத்தினரோ, இடத்தினரோ, மொழியினரோ இதற்குத் தனி உரிமை கொண்டாட இயலாது. அனைவருக்கும் பொதுவான இந்த வெற்றியினை, ஒற்றுமை உணர்வோடு நினைவுகூர்வது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தத் தியாக வேள்வியில், தங்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அளித்தவர்களை, நாம் இதயம் நிறைந்த நன்றியுணர்வோடு, தொடர்ந்து நினைவு கூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

எதற்காக, எந்த இலட்சியத்திற்காக, அந்த விடுதலை வீரர்களும், வீராங்கனைகளும் போராடினார்களோ அந்த இலட்சியத்தை, அதன் பலனை, நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

அடிமைத்தளை அகன்று, அன்னை நாடு விடுதலை பெற்றுவிட்டது. அரசியல் விடுதலையை அடைந்த நாம், சமூக, பொருளாதார விடுதலை பெற, இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அன்று அந்த விடுதலையை, நமக்குப் பெற்றுத் தந்த அதே ஒற்றுமை உணர்வு, இன்று நம்மிடையே நிலவுமானால், நிச்சயமாக எந்த விடுதலையையும் நம்மால் எளிதாகப் பெற முடியும் என்பதை, இத்தருணத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால், சாதியால், மதத்தால், இனத்தால், இடத்தால் ஏற்படும் சச்சரவுகளால், நமது இலக்குகளை நாம் விரைவில் அடையமுடியாமல், தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை, நாம் மறைக்க முடியாது. இந்த வேறுபாடுகளைக் களைந்து, நாம் அனைவரும் இந்தியத் திருநாட்டின் குடிமக்கள், என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டால், நமது வெற்றிகளை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

**எங்களுக்கு வழிகாட்டட்டும்**

இந்த விழா வழங்குகின்ற உத்வேகம், புத்துணர்ச்சி, நம்மிடம் தொடர்ந்து நிலைத்து இருக்க வேண்டியது, தற்போது மிகமிக அவசியம். இலட்சியப் பாதையில் வீறுநடை போட, உங்களது தியாகம் எங்களுக்கு வழிகாட்டட்டும்; உங்களது வீரம், எங்கள் விழிகளுக்குள் ஒளி ஊட்டட்டும், என்று வேண்டுகிறேன்.

எதிர்கால நம் தலைமுறையினருக்கு, இந்த நன்னாளை நினைவூட்டும் முகத்தான், சென்னை காந்தி மண்டப வளாகத்தில், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா ஆண்டு நினைவுத்தூண் ஒன்றை நிறுவிட, அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான அடிக்கல்லினை, இந்தப் புனித வேளையில் நாட்டியதை எண்ணிப், பெருமை அடைகின்றேன்.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, என்றென்றும் போற்றிப் புகழும் எங்கள் அரசு, 'வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா ஆண்டில்', நமது தமிழகத்தில் உள்ள விடுதலை வீரர்களைப் பாராட்டும் முகத்தான், இச்சீரிய விழாவினைச் சென்னையில் எடுத்துள்ளது.

விடுதலைப் போராட்டத்தியாகிகளின் கோரிக்கைகள் பல, நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன, என்பதை நான் அறிவேன். அரசிடம் உதவி நாடி வரும் மக்களுள், தலையாய இடம் அளிக்கப்பட வேண்டியவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று நான் குறிப்பிட்டால், அதனை மறுக்க முடியாது.

நமது நாட்டின் விடுதலைக்காகத் தங்களை வருத்திக்கொண்டு, சிறையில் வாடிய அத்தியாக

சீலர்களுக்கு, அந்நியா ஆட்சியின் கொடுமைகளால், தாங்கொணாத் துயரமடைந்தும், சிறிதும் மனம் தளராது, தாம் கொண்ட சுதந்திர வேட்கையில் உறுதியாக இருந்த அந்த நல்லவர்களுக்கு, நாம் முன்னுரிமை கொடுப்பது தான் முறையாகும். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள், அரசாலும் அனைவராலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், அவர்களுக்கென ஒருசில சிறு உதவிகள் புரிவது, அரசின் கடமை ஆகும். அந்த அடிப்படையில்தான், இந்நன்னாளில் கடமை உணர்வோடு, அவர்கள் பயன்பெறத்தக்க வகையில், ஒருசில அரசு சலுகைகளை அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**அரசு அளிக்கும் சலுகைகள்**

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு, மத்திய அரசும், மாநில அரசும், ஓய்வூதியம் வழங்கி வருகின்றன. தற்போது, மத்திய அரசு வழங்கும் மாத ஓய்வூதியமாக 750 ரூபாயைத் தமிழகத்திலுள்ள 1,706 தியாகிகள் பெற்று வருகின்றனர்.

மத்திய அரசு வழங்கும் ஓய்வூதியத்துடன், தமிழக அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான 100 ரூபாயையும் சேர்த்து, 850 ரூபாய் பெற்று வரும் தியாகிகள், 4,023 பேர் உள்ளனர்.

மாநில அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான, 400 ரூபாயை மட்டும் பெற்று வரும் தியாகிகள், 6,681 பேர் இருக்கின்றனர்.

இனி இவர்கள் அனைவரும் மொத்த ஓய்வூதியமாக, ஒவ்வொரு மாதமும், 1,000 ரூபாய் பெறும் வகையில், ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆணையின்படி, இந்த மாதம் முதல், 750 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 250 ரூபாய் கூடுதலாகவும்; 850 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 150 ரூபாய் கூடுதலாகவும்; இதுவரை மாநில ஓய்வூதியமாக 400 ரூபாய் பெற்று வந்தவர்களுக்கு, 600 ரூபாய் கூடுதலாகவும் வழங்கப்படும்.

மேலும், சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியமான 400 ரூபாயை - 500 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள 15,169 விடுதலை வீரர்களும், அவர்தம் குடும்பத்தினரும், இந்த அறிவிப்புகளைப் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன். அரசிற்கு நிதி நெருக்கடியான இந்தச் சூழ்நிலையிலும், நாட்டிற்கு உழைத்த நல்லோருக்கு, இந்நன்னாளில் நாம் ஏதாவது உதவவேண்டுமே என்ற நல்லெண்ணத்தில்தான், அரசிற்கு 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படினும், அதனைப் பொருட்படுத்தாது, விடுதலை வீரர்களின் ஓய்வூதியங்களை உயர்த்தி ஆணையிட்டுள்ளேன்.

இதுவரை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய, சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச பஸ் பாஸ் சலுகையை சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, நீண்டகாலமாகவே அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது.

இந்த நன்னாளில், சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும், இலவச பஸ் பாஸ் வழங்கலாம் என்ற முடிவை அரசு எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை தவிர, மேலும் பல கோரிக்கைகள் உள்ளன என்பதையும் நான் அறிவேன். அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, விரைவில் உங்களுக்கு நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இவ்விழாவில் கலந்து கொள்ள, அனைத்து மாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ள, ஏறத்தாழ 1000 விடுதலை வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, இவற்றை எடுத்துச் செல்ல, பயணப்பெட்டி ஒன்றையும் அரசு கொடுத்துச் சிறப்பித்துள்ளதை எண்ணிப் பெருமைகொள்கிறேன்.

**விடுபட்ட விடுதலை வீரர்கள்**

இன்றைய விழாவில், குறிப்பிட்ட ஒரு சில விடுதலை வீரர்களை மட்டும்தான் அழைத்துச் சிறப்பிக்க முடிந்தது. தமிழகத்தில் உள்ள எல்லா விடுதலைப் போராட்ட வீரர்களும், இன்று இவர்கள் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, வருகின்ற ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளன்று, நடைபெற இருக்கும் சுதந்திர நாள் விழாவில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களினால் சிறப்பிக்கப்படுவார்கள்.



இன்றைய விழாவில் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வீரருக்கும், பொன்னாடை அணிவித்து, பொன் விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, அவற்றை எடுத்துச் செல்லப் பயணப் பெட்டி ஒன்றும், சுதந்திர தினத்தன்று, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரித்திரப் புகழ் கூறும் இந்நன்னாளில், தமிழகத்தில் வாழும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும், என் அன்பு வாழ்த்துக்களை, மகிழ்ச்சியுடன் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்

அதே நேரத்தில், இந்தியாவைக் காக்கின்ற ஒப்பற்ற பணியில், தங்களை எப்போதும் ஈடுபடுத்திக் கொள்ளவும், இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி, அதற்கு ஆதரவாக என்றென்றும் உறுதுணையாக நிற்கவும், தமிழ்நாடும், தமிழக மக்களும், இந்த விழாவின் மூலம் சூளுரை ஏற்போம்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில், பொதுத்துறைச் செயலர் திரு. பெ. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா நிகழ்ச்சிகளைச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க. கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தொகுத்துரைத்தார்.

## கலைவாணர் அரங்க நிகழ்ச்சி: சிறப்பு அம்சங்கள்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழாவும், அது தொடர்பான நினைவுத் தூண் அடிக்கல் நாட்டு விழாவும் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில், 9.8.92 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டார்; சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்துக் கவுரவித்து, நினைவுப் பரிசு வழங்கி, கிண்டியில் இருக்கும் காந்தி மண்டபத்தில் எழுப்பப்படவிருக்கும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார்.

மேடையில், மகாத்மா காந்தி அடிகள் உருவப்படம் பூச்சரங்களின் நடுவிலே பொலிவுறத் திகழ்ந்தது. 'வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா - நினைவுத் தூண் அடிக்கல் நாட்டுவிழா' என்ற எழுத்துக்கள் மலர்களாலேயே அலங்கரிக்கப்பட்டிருந்தன.

**கண்காட்சி**

விழா நடைபெற்ற கலைவாணர் அரங்கின் வெளிப்புறம், மத்திய செய்தி-ஒலிபரப்புத் துறையினர் புகைப்படக் கண்காட்சி அமைத்திருந்தார்கள்.

விடுதலைப் போராட்டக் காலக் களக் காட்சிகள் பல அதில் இடம் பெற்றிருந்தன.

**அமைச்சர் கே.ஏ.கே.**

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

'இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிகச் சிறப்பாகத் தமிழகத்தில், அரசு சார்பில் இந்த விழா நடைபெற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முனைந்து நிற்பதே காரணம். அன்றைய தேசிய உணர்வு அணையாமல் காத்த பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கு உண்டு; அதன்பின் புரட்சித் தலைவருக்கு உண்டு; அதற்குப் பிறகு அவர் அடியொற்றி நடக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டுமே உண்டு. ஆகவேதான் அவர் இன்று ஒரு தேசியத் தலைவர்போல் திகழ்கிறார்!'

**தலைமைச் செயலாளர்**

அரசு தலைமைச் செயலாளர், திரு.டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்:

'மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெருமுயற்சியால் நடத்தப்படும் இந்த விழாவானது, இந்திய வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சியாக இடம் பெறும். முதல்வர் அவர்களின் இந்தத் தேசிய உணர்வானது தியாக சீலர்களால் பெரிதும் போற்றப்படும். 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்; அன்பு தன்னில் செழித்திடும் வையம்' என்று பாடினார் பாரதியார். அந்த வகையில், இந்த அரசு சாதிமத பேதமற்ற சமுதாயம் காணப் பாடுபட்டு வருகின்றது.

**வாழப்பாடி இராமமூர்த்தி**

தனது வாழ்த்துரையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதாவது:

'இந்திய விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் பெருமைப்படுத்துவதற்காக இந்த விழா எடுப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்கள் அன்று தேசியக் கொடிகளையெல்லாம்அறுத்துத்தீயிலிட்டபோது, அருணா ஆசப் அலி என்கிற வீரப் பெண்மணி ஒருவரே, பூனாவில், யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு நமது தேசியக் கொடியை ஏற்றினார். அதேபோல, இந்நாட்டில் பயங்கர வாதங்கள், அராஜகங்கள் தலை தூக்கியபோது, அதையெல்லாம் அடக்கிப் பெருமை கொண்ட வீரப் பெண்மணிதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

'தமிழகம் இன்று தேசிய நீரோட்டத்தோடு கலந்திருப்பதை, என்னைப் போன்ற தேசியவாதிகளெல்லாம் பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களே! எத்தகைய துன்பம் வரினும் சரி; எங்களைப் போன்ற தேசியவாதிகள் - சுதந்திரப் போராட்ட

வீரர்கள் - தியாகிகளெல்லாம் உங்கள் பின்னால் நிற்கத் தயாராக இருக்கிறோம். எனவே, எப்படிப் பட்ட துன்பம் வந்தாலும் நீங்கள் தைரியமாகச் செயல்படலாம்'.

**சிலம்புச் செல்வர் ம.பொ.சி.**

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரையாற்றினார்.

'இந்தியா சுதந்திரம் பெற்ற தென்றால், அன்றைய தினம் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் வெறும் மனிதாத்மா அல்ல; மகாத்மா என்பதுதான் முக்கிய காரணம். அவர் தொடங்கிய ஆகஸ்ட் போராட்டத்தால், தேசமே சிறைச்சாலை ஆகிவிட்டது. 'தேசத்தையே சிறைச்சாலையாக்கி விட்டு நீங்கள் சூப்பிரண்டெண்டாக இருக்கிறீர்கள்' என்று அதுபற்றி வைஸ்ராய்க்கே கடிதம் எழுதினார் காந்தியார்.

'டாக்டர் எம்.ஜி.ஆர். ஒரு சிறந்த தேசியவாதி போலவே திகழ்ந்தார்; பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடினார்; மகளிர் முன்னேற வேண்டும் என்று அவர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் மகளிர் பல்கலைக்கழகம் அமைத்தார். அவர் இன்று இல்லாவிட்டாலும், அதே ஒன்றுபட்ட அமைப்பாக இருந்து முதல்வர் அவர்கள் ஆட்சி செலுத்துவது கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்'.

**அமைச்சர் டாக்டர் நாவலர்**

அமெரிக்க நாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பியபின், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய முதல் விழா இது. டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதாவது:

'அருமை பெருமைமிக்க இந்த விழாவைத் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைக்கிணங்க கொண்டாடுகிறது என்றால், தமிழ்நாட்டில் உள்ள ஆறுகோடி மக்களும் கொண்டாடுவதாகவே பொருள். இந்த நேரத்தில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இன்னுயிர் நீத்தோரனைவருக்கும் நாம் வீரவணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த பெருமையாளர் என்

> ● சேவை என்பது கூலியை உத்தேசித்தோ தனது சுயநலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்தான். **—தந்தை பெரியார்**

பதனாலேதான் காந்தியாரை 'வாழ்க நீ எம்மான்' என்று பாரதி பாடினான். விடுதலைப் போராட்ட வீரர்களே! நீங்களெல்லாம் அன்று செய்த தியாகத்தின் நோக்கத்தை இன்றுள்ள இளைய தலைமுறையினர் பின்பற்றிச் செயல்பட முன்வரவேண்டும்'.

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை உரையாற்றினார்:

'நல்லவர்களைப் பாராட்ட நல்லவர்களாலேயே முடியும்; வல்லவர்களைப் பாராட்ட வல்லவர்களாலேயே முடியும். அதேபோல், தேசியவாதிகளின் தியாகத்தைப் பாராட்ட புரட்சிகரமான எண்ணத்தைத் தன் மனதிலே கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஒருவராலேதான் முடியும் என்பதை, இந்த விழாவின் மூலம் இந்தியத் துணைக் கண்டமே கண்டு பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நாளில், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட தியாக தீபத்தை ஏந்திப் பிடித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் கரத்தை வலுப்படுத்த தேசியவாதிகளெல்லாம் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில், தலைநிமிர்ந்த இந்தியாவைக் காணப் பாடுபடும் முதல் முதலமைச்சராகத் திகழ்பவர் நம் புரட்சித் தலைவி அவர்களேயாவார்'.

வாழ்த்துரை நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டினார். அக் கல்வெட்டில், பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

**'வெள்ளையனே வெளியேறு
இயக்கப் பொன்விழா
நினைவுத் தூண்'**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடித் திங்கள் 25-ஆம் நாள் (9.8.92) அடிக்கல் நாட்டப்பட்டது.**

**- டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்
தமிழ்நாடு அரசு.**

**தியாகிகளுக்குப் பாராட்டு:**

இதற்குப் பிறகு சிறப்புரை ஆற்றி முடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆயிரம் பேர்களைச் சிறப்பிக்கும் வகையில் - அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கிப் பயணப்பெட்டி ஒன்றும் அளித்து மகிழ்ந்தார்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி., திரு. தளவாய், திரு.டி.செங்கல்வராயன், திரு.ஜெகதீசன், திருமதி மகாலட்சுமி பாரதி, திருமதி கமலா சுப்பிரமணியம் உட்பட 50 விடுதலைப் போராட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாமே மேடையில் சிறப்புச் செய்தார்.

பார்வையாளர் பகுதியிலிருந்த மற்றவர்களுக்கெல்லாம், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. க. பொன்னுசாமி, மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவரவர் இருக்கைக்கே சென்று பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

**தியாகிகள் சார்பில்...**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் - விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்தமைக்காக - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பிலும், தியாகிகள் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

- இவ் விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.



மின்கலப் பேருந்தினை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பார்வையிட்டுப் பயணம் செய்தார் (1.8.92)

## வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மின்கலப் பேருந்து

சென்னை வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு ரூ.5 இலட்சம் செலவில் பேட்டரியினால் இயங்கும் புதிய பேருந்து ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக இந்தப் பேருந்தினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 2.8.92 அன்று வண்டலூரில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

உயிரியல் பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் பேட்டரியில் இயங்கும் இந்த மின் பேருந்தைத் தமிழக அரசு வாங்கியுள்ளது. இந்த மினி மின்கலப் பேருந்து சத்தமில்லாமல் செல்வதால் விலங்குகளின் அருகில் சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்.

இன்னும் ஒருமாதக் காலத்திற்குள் இதே போன்று மேலும் இரண்டு மின்கலப் பேருந்துகள் தமிழக அரசின் சார்பில் வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு வழங்கப்படும்.

தற்போதுள்ள எண்ணெய்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டும், இறக்குமதி செய்யப்படும் எண்ணெயை நம்பி இருக்கும் தன்மையைக் குறைக்கும் பொருட்டும், எண்ணெய் உபயோகிப்பதை மிச்சப்படுத்தவும், அதனால் ஏற்படும் அன்னியச் செலாவணியைச் சேமிக்கும் பொருட்டும், இரைச்சல் மற்றும் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கவும், சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும், ஊட்டியில் சேரன் போக்குவரத்துக் கழகமும் தலா ஐந்து மின்கல ஊர்திகளைப் பரிசோதனை முறையில் இயக்கிட அரசு அறிவுரை வழங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து குறித்த 1992-93 கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

இதை ஒட்டி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் சென்னையில், மின்கலத்தினால் இயங்கும் ஐந்து ஊர்திகளை வாங்கி இயக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, பல்லவன் போக்குவரத்துக் கழகம், போபாலில் உள்ள பாரத கனரக மின்னியல் நிறுவனத்திடமிருந்து (BHEL) பேருந்து ஒன்றுக்குச் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து பேருந்துகளை வாங்கியுள்ளது. பேருந்து ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் Department of Non Conventional Energy and sources இடமிருந்து மானியம் பெறப்பட உள்ளது.

இவ்வூர்தி மின்கலத்தில் உள்ள மின்சக்தியினால் இயங்குகிறது. இது அதிகபட்சமாக ஒரு மணிக்குச் சுமார் 40 கி.மீ. வேகத்தில், சுமார் 70 கி.மீ. தொலைவு வரை செல்லும். இவ்வூர்தியை மீண்டும் இயக்குவதற்கு மின்கலன்கள் சுமார் 10 மணி நேரம் சார்ஜ் செய்யப்பட வேண்டும். இவ்வூர்தி 96 வோல்ட் 300 ஆம்பியர் ஹவர் லெட் ஆசிட் டிராக்சன் பாட்டரி உதவியால் இயங்குகிறது.

இந்த ஊர்தியின் மொத்த எடை சுமார் 4000 கி.கி. இதில் 18 பேர் செல்லலாம்.

இந்த மின்கல ஊர்தியினால், எண்ணெய்க்குப் பதில் மின் சக்தியைப் பயன்படுத்தி அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம். இரைச்சல் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மாசு ஏற்படுவதைத் தடுக்கலாம்.




# கோவை மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

**கோ**வை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 481 பேர்களைத் தேர்ந்தெடுத்து 3.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கோவையிலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக, தையல் இயந்திரம் 9 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 19 பேர்களுக்கும், காதொலிக் கருவி 23 பேர்களுக்கும், பட்டு வளர்ச்சித் திட்டக் கருவிகள் 8 பேர்களுக்கும், பட்டு வளர்ச்சிக்கென நிதியுதவி 4 பேர்களுக்கும், சவரப்பெட்டி 5 பேர்களுக்கும் வழங்கப்பட்டது.

கலப்புத் திருமண உதவி 7 நபர்களுக்கும், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவி ஒருவருக்கும், விழியிழந்தோர் திருமண உதவி ஒருவருக்கும், விதவை மகள் திருமண உதவி 10 பேர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் சாலை விபத்து நிவாரண உதவி 3 பேர்களுக்கும், நலிந்தோர் நல உதவித் திட்டத்தின்கீழ் 113 பேர்களுக்குக் கடன் உதவியும், விபத்து நிவாரண உதவி 2 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 34 பெண்களுக்கு ரூ.1,70,000 நிதி உதவியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 111 நபர்களுக்கு கடன் உதவியும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 4 நபர்களுக்கு ரூ.10,75,087 வட்டியில்லாக் கடனும், உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கும், தாட்கோவின் மூலம் தொழில் தொடங்க 4 பேர்களுக்கு ரூ.13,03,000-மும், வீட்டு மனைப் பட்டா 23 பேர்களுக்கும், விதவை ஓய்வூதியம் 13 பேர்களுக்கும், குடிசை மாற்று வாரிய நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 27 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், கைத்தெளிப்பான் 5 பேர்களுக்கும், மூன்று சக்கர வண்டி 2 பேர்களுக்கும், பெண் ஆட்டோ ஓட்டுநர் கடனுதவி ஒருவருக்கும், விதவை குழந்தைகள் 10 பேர்களுக்கும், ஏழைக் குழந்தைகள் 20 பேர்களுக்கும் இலவசப் பாடநூல்களும், மாண்புமிகு முதல்வர் நிவாரண உதவி இருதய அறுவைச் சிகிச்சைக்காக 24 நபர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

மொத்தம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 481 நபர்களுக்கு ரூபாய் 40,63,589 பெறுமானமுள்ள உதவிகளை அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 340 பேர் பெண்களாவர்.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 நபர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக மாண்புமிகு முதல்வர் நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் ரூ.1,63,000 நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.



# படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி. காந்தகுமாரி பட்நாகர் அவர்களுக்குத் தமது இல்லத்தில் தேநீர் விருந்து அளித்தார் (29.7.'92).

சென்னை நகரில் போக்குவரத்துக் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நவீன ரக மோட்டார் சைக்கிள் மற்றும் கருவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார் (3.8.'92).





கோவையில் கே.ஜி. மருத்துவமனையில் ரூ.10 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவப் பிரிவுக் கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றித் திறந்து வைத்தார் (28.7.'92).

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தருமபுரி மாவட்டத்திலிருந்து வந்திருந்த மனுதாரர்களுக்குத் தலைமைச் செயலகத்தில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (10.8.92).



# "வெள்ளையனே வெளியேறு" வீர வரலாறு!

இருநூறு ஆண்டுக்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய நாடு ஒன்று திரண்டு ஓரணியாகப் பிரம்மாண்டமாக எழுந்து நின்று, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு மாபெரும் சவாலை விடுத்த நாள், 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாளாகும்!

அந்நாள் நம் விடுதலைப் போரின் வீர வரலாற்றில் பொன்னெழுத்துக்களாகப் பிரகாசிக்கும் பெருநாள்! பிரமிக்க வைக்கும் நமது சக்தியை நாமே உணர்ந்த நன்னாள்! சூரியன் மறையாத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தையே நடுங்க வைத்த சிந்திக்க வைத்த நாள்! நமக்குப் பூரண சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற நாள். கோடானு கோடி இந்தியர்கள் ஆண்டாண்டு காலமாக எதிர்பார்த்த முழு விடுதலை நம்மை நோக்கி ஓடி வரத் தொடங்கி விட்டது என்பதை நாடு உணர்ந்த மகத்தான நாள்!

இரண்டாவது உலகப்போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை! 1941 டிசம்பர்த் திங்களில் போரில் குதித்த ஜப்பான் நாடு, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளை வென்று, ரங்கூனைக் கைப்பற்றி, இந்தியாவின் கிழக்கு எல்லையில் நின்று கொக்கரித்துக் கொண்டிருந்த நேரம்!

ஜப்பான் இந்தியாவுக்குள் எந்நேரமும் நுழையலாம் என அனைவரும் அஞ்சிக் கொண்டிருந்த நேரம் அது! அதே கால கட்டத்தில் இந்தியாவிற்குச்

**என். இளங்கோ**

சுயாட்சி வழங்க இங்கிலாந்தை அமெரிக்கா நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால், இங்கிலாந்தின் பிரதமர், வின்ஸ்டன் சர்ச்சில் இதற்குப் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தார். ஆங்கில சாம்ராஜ்யத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நான் பிரதமர் ஆகவில்லை என்று சர்ச்சில் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ('I did not become the King's First Minister to preside over the liquidation of the British Empire') மக்களுக்குத் தங்களை எந்த அரசு ஆளவேண்டுமென முடிவு செய்யும் உரிமை அனைவருக்கும் உண்டு என்று கூறும் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் (Atlantic Charter) அமெரிக்காவும், இங்கிலாந்தும் கையெழுத்திட்ட பின், இது இந்தியாவுக்குப் பொருந்தாது என ஆணித்தரமாகச் சர்ச்சில் கூறினார்.

ஆனால், உலகப் போரில் பர்மாவை நோக்கி ஜப்பான் நெருங்கி வந்து கொண்டிருக்கும் சமயம், இந்தியர்களைச் சமாதானப்படுத்தவும், அமெரிக்க நிர்பந்தத்தைத் திருப்திப்படுத்தவும், கிரிப்ஸ் மிஸனை (Cripps Mission) சர்ச்சில் இந்தியாவிற்கு அனுப்பினார். சர் ஸ்டோபோர்ட் கிரிப்ஸ் (Sir Stafford Cripps) இந்தியாவிற்கு ஒரு புதிய திட்டத்துடன் வந்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். உலகப் போர் முடிவுக்கு வருவதற்கு முன்பே இந்தியாவிற்குச் சுயாட்சி வழங்கப்படும். போருக்குப்பின் இந்தியா தனக்கெனப் புதியதோர்








அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுத்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக உலகப் போரில் இங்கிலாந்தை இந்தியா முழுமையாக ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டார். ஆனால், யாரையும் திருப்திப்படுத்தாத இந்தத் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல, இரண்டு நூற்றாண்டுகளாக நம்ப முடியாத ஆங்கிலேயர்களை இன்று நம்ப இந்தியர்கள் தயாராக இல்லை.

நடைபெற்றுக் கொண்டிருந்த உலகப் போரில் இங்கிலாந்து தோற்று விடக்கூடிய அபாயமும் இருந்தது. தோற்றுப் போகக் கூடிய நாட்டின் வாக்குறுதிகளை நம்ப இந்தியத் தலைவர்கள் தயாராக இல்லை. அது, வீழ்ச்சியுறுகின்ற வங்கிக்கு வழங்கப்படும் முன் தேதியிட்ட காசோலை போன்றதாகும் என வர்ணிக்கப்பட்டது. (It was like a post-dated cheque on a crashing bank) எனவே, கிரிப்ஸ் மிஸன் படுதோல்வியைத் தழுவியது. அதைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களைப் பற்றி அண்ணல் காந்தியடிகள் கொண்டிருந்த அபிப்பிராயம் அடியோடு மாறியது. ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் மிகுந்த வருத்தத்தைத் தருவதாக அண்ணல் கூறினார்.

'I used to say that my moral support was entirely with Britain. I am very sorry to confess that today my mind refuses to give that moral support. British behaviour towards India has filled me with great pain' என்று காந்தியடிகள் கூறினார். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருந்தால் தான் ஜப்பானியர்கள் இந்தியாவில் ஊடுருவுவார்கள். ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டிவிட்டால் ஜப்பானியர்கள் நம் மீது படையெடுக்க மாட்டார்கள் என ஆணித்தரமாக நம்பினார்.

'The presence of the British in India is an invitation to invade India. Their withdrawl removes the bait' என வாதிட்டார். வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறினால் நம் பாதுகாப்பை நாம் கவனித்துக் கொள்ளலாம் என முழங்கினார்.



★ **நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால், குடிப்பழக்கத்தை விலக்க வேண்டும்.**

**சூரியன் மறையாத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தையே நடுங்க வைத்த - சிந்திக்க வைத்த நாள்! நமக்குப் பூரண சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற நாள்! கோடானு கோடி இந்தியர்கள் ஆண்டாண்டுக் காலமாக எதிர்பார்த்த முழு விடுதலை நம்மை நோக்கி ஓடி வரத் தொடங்கி விட்டது என்பதை நாடு உணர்ந்த மகத்தான நாள்! - 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாள்!**

அகிம்சைப் புரட்சியாக ஒரு மாபெரும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க மகாத்மா எண்ணினார். அந்த மகத்தான எண்ணத்தைத் தொடர்ந்து 1942-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் பதினான்காம் நாள் காங்கிரஸ் செயற்குழு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

'இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும்' என அத்தீர்மானம் கூறியது.

1920-ஆம் ஆண்டிற்குப் பின் தேக்கி வைக்கப்பட்ட அகிம்ஸா பலத்தை முழுவதுமாகப் பயன்படுத்தி, அண்ணல் காந்தியடிகளின் தலைமையின் கீழ் நாடு தழுவிய அறப்போராட்டம் தொடங்கும் என அது அகிலத்திற்குப் பறை சாற்றியது. இந்த 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் 8.8.1942 அன்று ஏற்றுக் கொண்டு, நாடு தழுவிய மாபெரும் அறப்போராட்டத்தை அறிவித்தது. அன்று மாலை அண்ணல் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார்:

'இந்த வினாடியிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாகக் கருதிச் செயல்பட வேண்டும். பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதைக் குறித்தும் நான் திருப்தி அடையப் போவதில்லை. நாம் செய்வோம் அல்லது செத்து மடிவோம். நாம் இந்தியாவை விடுதலை செய்வோம் அல்லது அம்முயற்சியில் செத்து மடிவோம்!'

'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் தொடங்கியது. மறுநாள் காலை அண்ணல் காந்தியடிகளும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். தலைவர்களைக் கைது செய்தால்

போராட்டத்தை நசுக்கி விடலாம் எனத் தப்புக் கணக்கு போட்டனர் ஆங்கிலேயர். நாடெங்கும் கொழுந்து விட்டெரிந்த விடுதலைத் தீயை, அண்ணலின் கைது என்னும் பஞ்சை வைத்து அணைத்துவிடப் பார்த்தனர் ஆங்கிலேய அறிவாளிகள். பஞ்சு பற்றியது. நகரங்கள் கொதித்தன. நாடே கொந்தளித்தது. ஊரெங்கும் நாடெங்கும் கதவடைப்பு. வேலைநிறுத்தம் ஊர்வலங்கள் தொடர்ந்தன. அகிம்சா வழியில் நடைபெற்ற இப்போராட்டத்தைக் கைது, தடியடி, துப்பாக்கிச் சூடு ஆகியவற்றின் மூலம் நசுக்கப் பார்த்தது ஆங்கிலேய அரசாங்கம். விளைவு - அறப்போராட்டம் வன்முறையில் இறங்கியது. The police repression let loose by the police goaded to fury crowds that had intended to act quite peacefully' என ஒரு ஆங்கிலேயப் பத்திரிகையாளர் அருமையாக வர்ணித்தார்.

அண்ணல் காந்தியடிகள் தொடங்கியது அறப்போர். அதை வன்முறையாக்கியது ஆங்கிலேயர்கள். சென்னை, பீகார், பம்பாய், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஆகிய பகுதிகளிலே வாழ்ந்த மக்கள், ஆங்கிலேயரின் அடக்குமுறையின் சின்னங்களை அடித்து நொறுக்கத் தலைப்பட்டனர். தபால் நிலையங்கள் எரிக்கப்பட்டன. ரயில்கள் கவிழ்க்கப்பட்டன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. போர்த்தளவாடங்கள் தயாரிப்பது நிறுத்தப்பட்டது.

தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால், நாட்டின் பலவேறு பகுதிகள் தொடர்பின்றித் துண்டிக்கப்பட்டன. இப்பகுதிகளில் ஆங்கிலேயரின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்றே கூறலாம்.

வங்காளத்தில் மித்னாபூர், உத்திரப்பிரதேசத்தில் பாலியா மற்றும் பலவேறு மாவட்டங்களில் 'இணை அரசாங்கங்கள்' 'Parallel Governments) நடைபெற்றன. சோசலிஸ்ட் குடியரசுப்படை போன்ற குழுக்கள் இக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இத்தகைய தனித்தனி நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி முறையான கொரில்லாப் போராக உருவாக்க ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அயராது பாடுபட்டனர். வன்முறை தொடர்ந்து பரவியது.

கையாளப்பட்டன. செப்டம்பர் இறுதியில் ஆங்கிலேயர் போராட்டத்தை நசுக்கி நாட்டை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். போராட்டத் தீயின் கடைசிப் பொறி 1943-இல் அணைக்கப்பட்டது.

போராட்டம் நசுக்கப்பட்டாலும் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் இந்தியச் சுதந்திர வீர வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய போராட்டமாகும்!

நம்மையும், நமது சக்தியையும், நமக்கும் நாட்டுக்கும் ஆங்கிலேயருக்கும் உலகத்திற்கும்

**''இந்த வினாடியிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாக கருதிச் செயல்பட வேண்டும். பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதைக் குறித்தும் நான் திருப்தி அடையப் போவதில்லை நாம் செய்வோம் அல்லது செத்து மடிவோம். நாம் இந்தியாவை விடுதலை செய்வோம் அல்லது அம் முயற்சியில் செத்து மடிவோம்'' என்று முழங்கினார் அண்ணல் காந்தியடிகள்.**

*1919*-இல் பஞ்சாப் பிரச்சினைக்குப் பின் முதன்முறையாக மக்களை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது. நவீன ஆயுதங்களைக் கொண்டு அப்பாவி மக்களை மூர்க்கத் தனமாகத் தாக்கினர். இயந்திரத் துப்பாக்கிகளால் சுடப்பட்டும் விமானத் தாக்குதலுக்கு ஆட்பட்டும், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். பத்தாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். மக்களின் போராட்டத்தை நசுக்கப் பயங்கரமான முறைகள்

உணர்த்திய உன்னதப் போராட்டமாகும்!

ஆங்கிலேயரின் ஆட்சியின் சவப் பெட்டியில் அடிக்கப்பட்ட முதல் ஆணி இப்போர்! விரைவில் வரப்போகும் விடுதலைக்கு முதல் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்த்து மலர்கள் தாம் இப்போர்!

இப்போராட்டம் நடைபெற்று ஐம்பதாண்டு நிறைவுறும் இந்நன்னாளில், விடுதலை வீரர்களின் தியாகங்களை நினைவுகூர்ந்து அவர்களது உணர்வுகளை இதயத்தில் சுமந்து, புதியதோர் இந்தியாவை வலிமை மிக்க இந்தியாவை - வளமிக்க இந்தியாவை இல்லாமையை இல்லாதாக்கி, உலகில் முதன்மை நாடாக்கி 2000-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்திட அயராது உழைப்போம்! வெற்றி நமதே!

**★ மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.**

- மகாத்மா காந்தியடிகள்

# தருமபுரி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



தருமபுரி மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 426 பேர்களைத் தேர்ந்தெடுத்து 10.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தருமபுரியிலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அன்று அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக, 26 பேர்களுக்கு ரூபாய் 43,874 மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களும் சலவைப்பெட்டி 6 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 7 பெண்களுக்கு ரூ.35,000-மும், கலப்புத் திருமண உதவி 2 பேர்களுக்கும், விதவை மகள் திருமண உதவி 5 பேர்களுக்கும், விதவை உதவித்தொகை 5 பேர்களுக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலிகளுக்கான உதவித்தொகை 4 பேர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கான உதவித் தொகை 2 பேர்களுக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50 நபர்களுக்கு ரூபாய் 16 இலட்சத்து 90 ஆயிரம் கடனுதவியும், ரூபாய் 10 இலட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் 3 நபர்களுக்கு டிராக்டர் வாங்கக் கடனும், 11 நபர்களுக்கு தொழில் முதலீட்டுக் கழகக் கடன் உதவியாக ரூபாய் 51 இலட்சத்து 86 ஆயிரமும், 8 நபர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 85 ஆயிரம் தாட்கோ கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 9 நபர்களுக்குக் கடனுதவியும், பட்டு வளர்ச்சிக்காக 24 பேர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 74 ஆயிரத்து 400 கடனுதவியும், 20 பேர்களுக்குக் கூட்டுறவு நிலவள வங்கிக் கடனுதவியாக ரூபாய் 4 இலட்சத்து 2 ஆயிரமும், மண்பாண்டத் தொழில் செய்ய 15 நபர்களுக்குக் கடனுதவியும், 34 பெண்களுக்குத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூபாய் ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 400 கடனுதவியும், தெளிப்பு நீர்ப்பாசனத்திற்கென 2 பேர்களுக்குக் கடனுதவியும், ரூபாய் 60 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் 24 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், ரூபாய் 28 இலட்சத்து 18 ஆயிரத்து 950 மதிப்பீட்டில் 158 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும், 9 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், இருவருக்கு ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டன.

மொத்தம் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 426 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 23 இலட்சத்து 64 ஆயிரத்து 524 பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 229 பேர் பெண்களாவர்.

இதுதவிர, கடந்த 5.7.92 அன்று வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம், பாலூர் புதூரில் ஏற்பட்ட வன்முறைத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவித்தொகையாக ரூபாய் 57,000 வழங்கினார்.

ஆக மொத்தம் அன்று (10.8.92) 454 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 24 இலட்சத்து 21 ஆயிரத்து 524 ரூபாய் பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது.



தொடர்ந்து முதலிடம்

# இருபது அம்சத் திட்டம்—இந்தியாவிலேயே தமிழகம்

நம் நாட்டின் ஒட்டு மொத்தமான பொருளாதார நெருக்கடி நிலைமை, நமது பணியை மிகவும் கடுமையாக்கியுள்ள போதிலும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதென நாம் முடிவு செய்துள்ளோம்.

1991-92-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு ரூ.1,600 கோடி நிர்ணயிக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டின் திட்ட அமலாக்கம் மேற்காணும் திட்ட ஒதுக்கீட்டை மிஞ்சுமென எதிர் கொள்ளப்படுகிறது.

1992-93-ஆம் ஆண்டுக்குரிய உயரளவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.1,751 கோடி என வரையறை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சருடைய அயராத முயற்சிகளின் காரணமாக, 1992-93- ஆம் ஆண்டிற்கு அதிகத் திட்ட ஒதுக்கீடு வேண்டுமெனக் கோரப்பட்டது நியாயமான கோரிக்கையே என மத்தியத் திட்டக்குழுவால் உணரப்பட்டு, இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1992-97 குறித்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மத்தியத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும் இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாளில் புதுதில்லியில் நடைபெற்றது எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.10,200 கோடியாக மத்தியத் திட்டக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு தொகையான ரூ.5,700 கோடியை ஒப்பிடும்போது, மேற்காணும் திட்ட ஒதுக்கீடு 77 சதவிகிதம் அதிகமாகும் என அறியலாம்.

### இருபது அம்சத் திட்டம்

இருபது அம்சத் திட்டம் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தை மனதிற்கொண்டு உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டமாகும். வறுமையை அகற்றி, ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இருபது அம்சத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், உபரி நிலங்களைப் பிரித்து வழங்கும் திட்டம், கொத்தடிமைகளிலிருந்து மீட்கப்பட்டோர் மறுவாழ்வு, நோய்த் தடுப்புக் குடும்ப நலத் திட்டங்கள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, குடிசைப் பகுதி மேம்பாடு, மரம் நடுதல், கிராமப்புறங்களுக்கு மின்வசதி, பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு, மரபுசாரா எரிசக்தி உபகரணங்களைப் பிரபலப்படுத்துதல் ஆகியவை தொடர்பான திட்டங்கள் போன்று, இருபது அம்சத் திட்டத்தின் கீழ் வருகின்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகளின் செயல்பாட்டை மத்திய அரசு மறு ஆய்வு செய்கிறது.

மத்திய அரசு பல்வேறு மாநில அரசுகளின் செயல்பாடுகளை ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்த்த பின்னர், 1991-92-ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது என அறிவிப்புச் செய்துள்ளது. தமிழ்நாடு அரசு இத்தகைய சாதனையை இதற்கு முன்னர், 1982-83, 1984-85, 1988-89 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளிலும் நிகழ்த்தியுள்ளது.

மாநில அளவில், கோயம்புத்தூர், பெரியார், கன்னியாகுமரி, காமராசர், திண்டுக்கல்-அண்ணா ஆகிய ஐந்து மாவட்டங்கள் 1991-92-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைமுழுமையாக எய்தி, முதலிடத்தைப் பெற்றுள்ளன.

# நூல் நயம்

## பெண்களும் சமூகமும்

**ஆசிரியர்:** அ. ஜெய்குமார்

**வெளியீடு:**

உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி,
சென்னை-600 001.

பக்கம்:136 விலை:ரூ.15/-

**பு**ராண காலத்திலிருந்து இன்றைய நவீன காலம் வரை பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வருவதை இந்நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது. பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறியுள்ள நூலாசிரியர், பெண்டிர் நலன் காப்பதற்காக அரசு நடைமுறைப்படுத்திய ஆணைகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

பெண்ணுக்குத் தாலி கட்டும் வழக்கம் கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் நமது நாட்டில் நிலவவில்லை என்பது ஆய்வு முறையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்நாளில் ஆடவர்க்கு இணையாகச் சில பெண்கள் பட்டம் பதவி பெற்று ஒளி வீசித் திகழ்வதையும் குறிப்பிடத் தவறவில்லை. நூலாசிரியர் இனிய எளிய நடை இந்நூலின் சிறப்பம்சம்.

—தமிழ்ப்பித்தன்

## நகரத்தார் யார்? எவர்? (முதல் தொகுதி)

**ஆசிரியர் மற்றும் வெளியீடு:**

பழ. அண்ணாமலை,
8, நைனியப்பன் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:242 விலை:ரூ.35/-

**ஒ**ருவரைப் பற்றித் தெரிந்துகொள்ள 'முகவரி' மிக மிக அவசியமாகிறது. இந்த வகையில் பல தொகுப்புகள் வெளி வந்துள்ளன. வெளிவருகின்றன. எழுத்துலகில் 'தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?' தொகுப்பு அந்தந்தக் கால கட்டங்களில் வெளிவந்திருக்கின்றன. இதேபோலப்பல மொழிகளிலும் வெளிவருகின்றன.

'நகரத்தார் யார்? எவர்?' என்னும் இந்நூலில் நகரத்தார்களின் நனிபுகழ் வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. இச்சமூக எழுத்தாளர்கள், வணிகப் பெருமக்கள் முதலானோர் பற்றிய குறிப்புகளைத் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

## டாக்டர் தயாவின் கிறிஸ்து நெறிக் கவிதைகள்

**ஆசிரியர்:** அருள்திரு டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:73 விலை:ரூ.35/-

**இ**ந்நூலில் 31 கவிதைகள் உள்ளன. இயேசு பெருமானின் பெருமைகளைச் சித்திரிக்கும் சித்திரங்களாக இவை விளங்குகின்றன. முதல் பாடலிலிருந்து முடிவு வரை எல்லாப் பாடல்களுமே தித்திக்கும் தேனமுதங்களாகத் திகழ்கின்றன.

அகவல், எண்சீர் ஆசிரிய விருத்தம், ஆறடித் தரவு, வஞ்சித் துறை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, நேரிசை ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, திருப்புகழ்ச் சந்தம், எழுசீர் விருத்தம் இவ்வாறு பல இலக்கண மரபுகளில் கவிதைகள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

'அருமை பெருமை அகன்றாய் போற்றி
வெறுமைக் கோலம் விழைந்தாய் போற்றி
மனித உருவில் வந்தாய் போற்றி
புனித அன்பைப் பொழிந்தாய் போற்றி
ஏழைக் கோலம் ஏற்றாய் போற்றி
கோழைக்கு உதவும் குமரா போற்றி'

என்று சிலுவை ஏறிய செம்மலைப் போற்றுகின்றார் கவிஞர். பாடவும், படிக்கவும் ஏற்ற இனிய நூல்.

## எழுத்தும் நானும்

**ஆசிரியர்:** சு.ரா.

**வெளியீடு:**

மகாகவி பதிப்பகம்,
2, ஜயசங்கர் தெரு,
சென்னை-33

பக்கம்:80 விலை:ரூ.7.50/-

**வி**.எஸ். சுந்தரராஜன் என்ற பெயருக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சு.ரா. என்னும் பழம்பெரும் எழுத்தாளரின் அனுபவ முத்திரைகள் இந்நூலில் பதிக்கப்பட்டுள்ளன.

எழுத்துப்பணி, பத்திரிகை உலக நுழைவு, அரசுப் பணி என்று தன் வாழ்க்கை நிலைகளை நிலையுறுத்தியுள்ளார் ஆசிரியர். தம் எழுத்துக்கு உதவியவர்களையும் அவர்களது புகைப்படத்தையும் வெளியிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நூலுக்கு டாக்டர் விக்கிரமன் முன்னுரை எழுதிச் சிறப்பித்திருக்கிறார்.

## நாளைய உலகம் நமது கையில்

**ஆசிரியர்:** வே. எழிலரசு

**வெளியீடு:**

கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:128 விலை:ரூ.16/-

**வா**ழ்க்கை வயல் முழுவதும் நம்பிக்கை நாற்றங்கால்களை நடவு செய்யுங்கள்.

நம்பிக்கைதான் வாழ்க்கையின் ஜீவ நாடி.

பணம், காற்று, தண்ணீர் இவைகளை விட நம்பிக்கை ஆதாரமானது. அதிக வலிவுடையது.

- என்று கட்டுரை தொடங்குகிறது. நமக்கும் நம்பிக்கை பிறக்கிறது, இது ஒரு நல்ல நூல் என்று. முழு வாழ்வு வாழ்வதற்கு, முழு மனிதனாகத் திகழ்வதற்கு, முன்னேற்றக் கருத்துக்கள் பல இந்நூல் முழுவதும் விரவியுள்ளன. ஆசிரியரின் அப்பழுக்கற்ற சிந்தனைச் சிதறல்கள் ஒவ்வொன்றும் முத்துக்கள்.

## ஸ்டில் மேதை நாகராஜ ராவ்

**ஆசிரியர்:** நீலம்

**வெளியீடு:**

சாந்தி பதிப்பகம்,
44, அண்ணாசாலை,
சென்னை-600 002.

பக்கம்:80 விலை:ரூ.15/-

**தி**ரைப்பட உலகில் 'ஸ்டில்' நாகராஜ ராவ் பேரும் புகழும் பெற்றவர். தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, காமிராவில் கைவண்ணம் காட்டியவர் அவர்.

பல்வேறு கோணங்களில் அவர் எடுத்த படங்கள் பலரால் பாராட்டப் பெற்று விடுகின்றன. மிக அற்புதமான அவரது படங்கள், அழியா ஓவியங்களாக விளங்கி வருகின்றன. அன்னாரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் அழகிய நூலே இது. இளம் புகைப்படக் கலைஞர்கள், இந்த மேதையின் வாழ்க்கையை அவசியம் படிக்க வேண்டும்.

—பி.வி.கிரி



# தென்றசை அன்றும் குற்றாலம்

**என். ரெங்கநாதன்**

**த**மிழ்நாட்டின் தென் மாவட்டமான திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென் பொதிகை மலை தழுவி வரும் தென்றலோடு திருக்குற்றாலத்து அழகு சிந்தும் அருவிகளில் நீர் சொட்ட மலரின் மணமும், மலையில் வளர்ந்துள்ள பல்வேறு மூலிகைகளின் மணத்தையும் அள்ளி வரும் சாரலும் தோன்றும் ஆனி, ஆடி, ஆவணி (ஜூன் முதல் செப்டம்பர் வரை) திங்கள்களில் நாட்டின்பல பகுதிகளிலிருந்து குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இருந்து மக்கள் அலை மோதுவர். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலோ - அப்பப்பா! கூட்டம் சொல்லி முடியாது. இயற்கை எழில் கொஞ்சும் செழுமை மிகு குற்றால அருவிகள் நாட்டவர் அனைவரையும் ஆண்டுதோறும் தவறாது வருகை தரத் தூண்டுகின்றன. வானத்தைத் தொட்டு நிற்கும் மலை முகடுகளும், வனப்பு மிகுந்த பறவைகளின் இன்னிசையும், வண்டூரும் மலர்களும், வழிபாட்டிற்குரிய தெய்வச் சிலைகளும், வரலாற்றுச் சிறப்பு மிக்க சிற்பங்களும் திருக் குற்றாலத்தில் கண்டு களிக்கத்தக்கன.

திருக்குற்றாலம் தென்காசி ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும், மதுரையில் இருந்து 160 கி.மீ. தூரத்திலும், திருநெல்வேலியில் இருந்து 60 கி.மீ. தூரத்திலும், திருவனந்தபுரத்திலிருந்து 115 கி.மீ. தூரத்திலும் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஏறத்தாழ 550 அடி உயரத்தில் உள்ளது. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை அருகில் உள்ள ‘குத்தாலம்’ என்ற ஊரை வேறுபடுத்துவதற்காக, குற்றாலத்தை திருக் குற்றாலம் என்றே அழைக்கிறார்கள்.

**ஸ்பா ஆப் சௌத்**

குற்றாலம் தென்னாட்டு ஸ்பா என்ற பெருமையுடைத்து. ஸ்பா என்பது பெல்ஜியம் நாட்டில் உள்ள ஊற்று நீர் வளம் நிறைந்த ஆரோக்கியத் தலம். அந்த ஊற்று நீர் மருத்துவ குணங்களைக் கொண்டதாக இருக்கும். அதே போல் குற்றாலம் இருப்பதால் முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள் இப்பெயரை இவ்விடத்திற்குச் சூட்டினர்.

**இலக்கியத்தில் குற்றாலம்**

''மலையார் சாரல் மகவுடன்
வந்த மடமந்தி குலையார்
வாழைத் தீங்கனி மாந்தும்
குற்றாலம்''

என்று தமிழிலக்கிய 'வோர்ஸ்ட் வொர்த்து' திருஞானசம்பந்தப்பெருமானால் போற்றப்பட்ட இத்திருத்தலம் தென்னாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கில் பழம்பெருமை வாய்ந்தது. சிவபெருமானின் ஐவகை அம்பலங்களுள் ஒன்றான சித்திர சபையினைக் கொண்ட சிறப்புடைத்து.

திருக்குற்றாலத்தில் கோயில் கொண்டுள்ள திருக்குற்றால நாதரின் பெருமையினை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

''சுற்றாத ஊர் தோறும் சுற்ற
வேண்டாம் புலனீர்
குற்றாலம் என்றொருகாற்
கூறினால் - வற்றா
வடவருவியானே மறு
பிறவிச் சேற்றில்
நடவருவி யானே நமை.''

அருவியைத் தாங்கியுள்ள குற்றாலம் மலை மூன்று கொடுமுடிகளைப் பெற்றுள்ளது. அவை பட்சிப் பொற்றை, வாலியம் பொற்றை, திருமலை பொற்றை ஆகிய பெயர்களைப் பெற்று 'திரிகூட மலையாக'க் குற்றாலக் குறவஞ்சியில் பாராட்டப்படுகிறது.

**இயற்கை வளம்**

இயற்கை அன்னையின் எல்லையில்லாப் பேரழகு இம்மலையில் எங்கும் பொங்கி வழிகிறது. தேக்கு, மயிலை, கோங்கு, அத்தி, புன்னை, ஆல், இலுப்பை, தென்னை, பலா, கமுகு, வாழை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சந்தனம், மங்குஸ்தான் ஆகிய மரங்கள் மணம் பரப்பி நிற்கின்றன. இம்மலையில் பூத்துக் குலுங்கும் மல்லிகை, செண்பகம், முல்லை, வெட்சி ஆகியவை வருவோரை வரவேற்கும் வண்ண மலர்களாகத் திகழ்கின்றன.

'பக்கம் வாழைப் பாய்
கனியோடு
பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி
தூங்கும் குற்றாலம்' -

என்று பாடுகிறார் சம்பந்தர், வேங்கை மரங்கள் சூழ்ந்த சோலையில் கோல வண்டுகள் குற்றால நாதரைப் பண் சுமந்த பாடலால் பாடும்.

'கொம்பார் சோலைக் கோல
வண்டு யாழ்செய் குற்றாலம்'

என்பார் ஞானசம்பந்தர்.

நில மலர்கள் சூழ்ந்த அணைகளை உடைய சோலைகளில் கோல மஞ்ஞை பேடையோடு ஆடும் குற்றாலத்தின் செந்நெல் வளத்தினைச் செழுமையினைத் திரிகூட ராசப்பக்கவிராயர்,

''கன்னிமாப் பழுத்துக்
கதலித்தேன் கொழித்துச்
செந்நெல் காத்து அளிக்கும்
நன்னகர்ப் பதியான்''

என்று பாடுவார்.

**நெஞ்சை அள்ளும் அருவிகள்**

குற்றால அருவிகளின் அழகைக் கான 'ஆயிரங்கண் போதாது வண்ணக்கிளியே - குற்றால அழகை நாம் காண்பதற்கு வண்ணக்கிளியே' என்று பாடி மகிழ்கிறார் கவிஞர். மலர்களும் கனிகளும் அங்கே மண்டிக் கிடிக்கும் அருவிகள் ஒன்றா, இரண்டா! ஒன்பது அருவிகள்! அவைகளை வர்ணிக்க அழகு தமிழில் வார்த்தைகள் இல்லை.

''போதும் பொன்னும் உந்தி
அருவி புடைசூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும்
குற்றாலம்'

- திருஞான சம்பந்தர்

குற்றால அருவிகள் காட்சிக்கும் மாட்சிக்கும் உரியவை. உடல் நலமும், உள்ள வளமும், தரும் குற்றால அருவி, நோயகற்றும் மூலிகை மணத்துடன் நீராடும் மக்களுக்குப் புதுத்தெம்பும், எழுச்சியும் நல்குகின்றது.

பொதிகை மலை திரிகூடமலை எனப்படும் குற்றால மலையிலிருந்து

## ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 10 இலட்சம் ஊனமுற்றோர் நலத்திற்காக 1992-93-ஆம் ஆண்டிற்குச் சுமார் ரூ.700 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில், தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றோரின் நலன் மற்றும் மறுவாழ்வினை முழுமையாகக் கவனிப்பதற்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கான நலப்பணிகளை மேம்படுத்தும் பொருட்டும், சமுதாயத்தின் மிகவும் நலிவுற்ற இந்தப் பிரிவினரின் நெடுநாள் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் தற்போதுள்ள சமூக நலத்துறை பிரிக்கப்பட்டு 'ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்' உருவாக்கப்பட்டுள்ளது.

உருவாகிவரும் சிற்றாறு, தேனருவி, செண்பக அருவி, வற்றாத வட அருவி என்னும் பேரருவி, சிற்றருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றால அருவி, புது அருவி, பழத்தோட்ட அருவி என்று ஒன்பது அருவிகளாகப் பாய்ந்தோடிச் செல்வதைக் .காணக் கண் கோடி வேண்டும்.

**தேனருவி**

''தேனருவித் திரை எழும்பி
வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்''

என்று திருக்குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் நயமுற நவிலும் 'தேனருவி' மலையடி வாரத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் மலை மேல் நடந்தால் நூறு அடி உயரத்தில் இருந்து விழும் அழகிய காட்சியினைக் காணலாம். தேனைப் போன்று மெல்லிய ஒழுங்குடன் மலர்களைப் போன்று நீர்த் துளி சிதறி விழுகிறது. அக்காட்சியைக் காணாத கண்ணும் கண்ணோ?

அருவி தண்ணீர் விழும் இடத்திலிருந்து சுமார் 30 அடி தூரத்திற்கு நீண்ட குளம் போன்ற பகுதியில் நீந்தி மகிழ்ந்து விளையாடலாம்.

**செண்பக அருவி**

தேனருவியிலிருந்து புறப்பட்டோமானால் சுமார் 2½ கி.மீ. தூரத்தில், செண்பக அருவியினைக் காணலாம். தேனருவித் தண்ணீர் சிற்றாறு மலைக் குன்றுகளில் ஓடி மறுபடியும் ஓரிடத்தில் 30 அடி உயரத்தில் இருந்து அருவியாக விழுகிறது. 'செண்பக மரங்கள் நிறைந்த செழுமையான காட்டு வழியே பாய்ந்து வருவதால் இது 'செண்பக அருவி' எனப் பெயர் பெற்றது போலும். செண்பக தேவியின் சிறு கோயிலும் இங்கே இருக்கிறது. ''தேன் அலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும்'' என்று குற்றாலக் குறவஞ்சியில் புகழப்படும் இவ்விடம் நிலா விருந்துக்கும், மனைப்புற விருந்துக்கும் ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

**வட அருவி எனப்படும் பேரருவி**

செண்பக அருவியிலிருந்து வரும் தண்ணீர் சுமார் 2 கி.மீ. தூரம் அடர்ந்த மா மரங்கள் சூழ்ந்த காட்டின் வழியே வந்து மாவடித் துறையைக் கடந்து சுமார் இருநூற்று தொண்ணூறு அடி உயரத்திலிருந்து இழுமென 'இழிதரும் அருவி'யாக ஓசையெழுப்பி விழுகின்றது. வட அருவி எனவும் அழைக்கப்படும் இப்பேரருவியில் இரவு, பகல் என்ற வேறுபாடினின்றி மக்கள் எந் நேரமும் குளித்து மகிழ்வர். வெகு உயரத்தில் இருந்து ஒரே வீழ்ச்சியாக இஃது விழுமாயின் இவ்வருவியில் நீராடுவதே இயலாததொன்றாவிடும். அதனால் இயற்கையிலேயே இடையில் பெரும் பாறையில் விழுந்து பொங்கிப் பரந்து விரிந்து மேலெழுவதால் இதனைப் ''பொங்குமா கடல்'' என்று அழைப்பர். மழைக் காலங்களில் இப்பகுதியை மலையின் உச்சியிலிருந்து இதனைப் பார்க்கும்பொழுது நிலை தடுமாறி பலர் இறக்கவும் நேரிடுகிறது. அதனால் குற்றால சாரல் காலத்தின் போது தடுப்பு அரண்கள் அமைக்கப்படும். காவல்துறையின் கண்காணிப்பும் இருக்கும். எத்தனை முறை குளித்தாலும் எப்பொழுது குளித்தாலும் நீர்க்கோவை போன்ற ஊறுகள் நேராச் சிறப்புடையவை குற்றால அருவிகள்.

**கண்கொள்ளா ஐந்தருவி**

பேரருவியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் சிற்றாற்றின் ஒரு கூறு ஐந்தருவிகளாக விழுகிறது. ஆண்கள், பெண்கள் குளிப்பதற்கு என்று பிரிக்கப்பட்டுள்ளது. காட்சி அலங்கார ஒளிப்பிழம்புகள் இரவில் அருவியின் இயற்கை அழகுக்கு மெருகூட்டுகின்றன. அமைதியாகக் குளிக்க ஏற்ற அருவி. பந்தற் கூரைப் பாறை முருகன் திருக்கோயிலுடன் திகழ்கிறது.

**புலியருவி**

பாசுபத்தன் அருவி எனப்படும் புலியருவி 'குழந்தைகள்' குளிப்பதற்கேற்ற இடம். கலைத் தந்தை கருமுத்து தியாகராசனாரால் புதுப்பிக்கப்பட்ட ஐயனார் கோயிலும், அருவியும் அவரை என்றும் நினைவு கூர்வன. பெயர்க் காரணம் கேட்டால் 'புலிகள் இங்கு வந்து நீரருந்தும்' என்று கூறுவர்.

**பழைய குற்றால அருவி**

முப்பது அடி உயரத்தில் இருந்து விழும் பழைய குற்றால அருவி பேரருவியிலிருந்து சற்று தூரத்தில்



இருந்தாலும், சாரலின் போது சிறப்புப் பேருந்துகளும், வேன்களும் இயங்குகின்றன. திரு. காமராசர் முதலமைச்சராக இருந்த பொழுது மக்கள் குளிப்பதற்கேற்றவாறு செம்மைப்படுத்தப்பட்டதாகக் கூறுவர். ''சுள் சுள்' என்று விழும் அருவித் துளிகள் இங்கு குளிப்போரை மகிழ் விக்கும்.

**சிற்றருவி**

பேரருவிக்கு மிக அருகில் அமைந் துள்ள சிற்றருவி இரண்டு அருவி களாகப் பிரிக்கப்பட்டு ஆண்கள், பெண்கள் என்று தனித்தனியாகக் குளிக்க வசதி உண்டு. குளியலறை யில் குளிப்பது போல் இருக்கும். இங்கு குளிக்க நகரியத்தினர் சிறப்புக் கட்டணம் வசூலிப்பர்.

புது அருவி, பழத்தோட்ட அருவி, (சாமியார் அருவி) போன்ற அருவிகள் தற்பொழுது பிரசித்தம் பெற்று வருகின்றன.

**திருக்குற்றால நாதசுவாமி திருக்கோயில்**

மாணிக்கவாசகப் பெருந்தகை யார் தம் திருக்கோவையாரில் ''குற்றாலத்துக் கோல பிண்டி பொழில் வாய்தட வரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே'' எனச் சிறப்புற்ற குற்றால நாதர் திருக் கோயிலில் இறைவனுக்கு வலப்புறம் குழல் வாய் மொழி அம்பிகையும், இடப்புறம் பூரண மேரு ரூபமாக இறைவி பராசக்தியும் கொலுவீற்றி ருக்கிறார்கள்.

கோயிலில் உள்ள பிரகாரத் திலிருந்து பேரருவியின் அழகைக் கண்டு ரசிக்கலாம்.

இத்தலத்தில் வருடத்தில் சித்திரை விசு, ஐப்பசி விசு, மார்கழித் திருவாதிரை போன்ற திருவிழாக்கள் பத்து நாட்களும், தை மகத் தெப்பம் ஒரு நாளுமாக நடைபெற்று வருகின் றது. திருவிழாக் காலங்களில் இங்கு நடைபெறும் தாண்டவ தீபாரா தனையைப் போல் தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாது. காண்பவர்கள் கண்ணையும், கருத் தையும் ஒருங்கே ஈர்க்கக் கூடியது.

**சுற்றுலா வளர்ச்சி**

ஏழைகளின் நல்வாழ்வுத்தலம் என்ற பெயர் பெற்ற குற்றாலம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் சுற்றுலாத்தல மாகும்.

சாரல் சீசனின் போது அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பு பேருந்துகளை இயக்குகின்றன.



தனியார் வேன்களும் அதிக அள வில் விடப்படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் உணவுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. உல்லாசப் படகு சவாரிக்கும் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சார்பில் தகவல் மையமும் இயங்குகின்றது. சாலை களும், அருவிப் பகுதிகளும் புதுப் பிக்கப்படுகின்றன.

**தங்குமிடங்கள்**

குற்றால நகரியத்தின் சார்பில் சிறுகுடில்கள், ஒருவர் தங்கும் அறை, இருவர் தங்கும் அறை, குடும்பம் தங்கும் அறை என்று பல்வேறு தங்கும் விடுதிகள் கட்டப் பட்டுள்ளன. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும்.

இவைத்தவிர கோயிலின் சார் பில் கட்டப்பட்ட தங்கும் விடுதிகள், வனத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை சார்பில் கட்டப்பட்ட ஆய்வு விடுதிகள், போக்குவரத்துக் கழகம் தொழி லாளர் அமைப்பு ஆகியவற்றின் ஓய்வு விடுதிகள், தனியார் விடு திகள் எனப் பலவகை தங்கும் விடுதிகள் உள்ளன. அருகில் உள்ள தென்காசியிலும் தனியார், அரசு தங்கும் விடுதிகள் உள்ளன. தென் காசி புகைவண்டி நிலையத்தில் தங்கும் விடுதிகள் அமைக்கப் பட்டுள்ளன.

**பொழுது போக்கு**

சாரல் 'சீசனி'ல் சாரல் திரு விழா நடத்தப்படுகின்றது. திரை யரங்கம், பூங்கா, பாம்புப் பூங்கா, படகுச் சவாரி, பொருட்காட்சி போன்றவையும் இதர பொழுது போக்கு அம்சங்களாகும்.

முடிவாகக் கூறினால், பார்த்தால்
பரவசம்
குறித்தால் உடலில் சுகம் -
உள்ளத்தில்
ஆனந்தம் இதுதான் குற்றாலம்.

சுருங்கக் கூறினால் இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் இடம், அழகின் சிரிப்பு குற்றாலம். குற்றாலம் சென்று அருவிகளில் குளித்து மகிழ்வோம்!

**- நன்றி: 'திட்டம்'.**



**இன்சாட்**

**முதன் முதலாக, முழுவதும் நம்நாட்டுப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது தலைமுறை பல நோக்குச் செயற்கைக் கோள் இன்சாட் - 2ஏ ஜூலை மாதம் 10-ஆம் தேதி பிரெஞ்சு கயானா வில் உள்ள கூரு என்ற இடத் திலிருந்து சக்தி வாய்ந்த 'ஏரியன்' என்ற ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.**

**தற்போது விண்ணில் அது வெற்றிகரமாகச் சுற்றி வருகிறது. கர் நாடகாவில் ஹசனில் உள்ள தலைமை விண்வெளிக் கட்டுப் பாட்டு மையத்தின் கீழ் இது இயங் கும். செலுத்தப்படுவதற்கு முன் இன்சாட் 2ஏ-வின் மொத்த எடை 1906 கிலோ, நீளம் 23 மீட்டர். வானிலை பற்றிய விவரம், புயல் எச்சரிக்கை குறித்து இச் செயற்கைக் கோள் தெரிவிக்கும். தொலைத் தொடர்பு, தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்பிற்கும் இச் செயற்கைக்கோள் உதவும்.**


சரித்திரத்தில் பொறி பறந்த நேரம்!
—கவிஞர் இளையவன்

ஆடிமாதம் காற்றடிக்கும்,
ஆங்காங்கே தூறல் விழும்
வாடிப் போன செடிதுளிர்க்கும்
வறண்ட நிலம் நீராகும்;
அப்படித்தான் நம்இயற்கை விதித்தது—ஆனால்
அந்த ஆண்டு ஆகஸ்டு கொதித்தது!

பண்ட மாற்று செய்ய வந்து
பாரதத்தில் பொய் அளந்து
ஒண்ட வந்த பேய்க்கதையாய்
உணர்ச்சிகளை நோகடித்த
வெள்ளையரை மூட்டை கட்டச் சொன்னது—அன்று
வீதியெல்லாம் வீரமாகி நின்றது!

மிதித்திருந்த வஞ்சகத்தை
மீறிவந்த ஒரு கிளர்ச்சி
கொதித் தெழுந்த கனற்பிழம்பு
கொடி பிடித்த யுகப்புரட்சி
சரித்திரத்தில் பொறிபறந்த நேரமே—அச்
சம்பவங்கள் நினைவிருந்தால் போதுமே!



# மானிடவியல் படிமங்கள்

கடந்த ஏப்ரல் மாதம் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட 'தென் இந்தியப் படிமங்கள்' என்ற சிறப்புக் கண்காட்சியின் ஒரு பகுதியே 'மானிடவியல் படிமங்கள்' ஆகும்.

நமது வரலாற்றுக் காலப் படிமங்களை அறியுமுன், இந்தியாவின் வெண்கலக் காலத்தைப் பற்றியும், முந்தைய வரலாற்றுத் தொல்பொருளியல் மக்கள் வெண்கலத்திலிருந்து வடித்த அரும்பொருள்கள் யாவை? அவை சமூக, பொருளாதார மற்றும் சமய வாழ்வில் எவ்வகையில் சம்பந்தப்படுத்தப்பட்டன; அவ்வித அரும்பொருள்கள் 2000 - 2500 ஆண்டுகளுக்குப் பிறகு எப்புதையல் தடயங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டன என்பதை எல்லாம் ஒன்று திரட்டி, ஒட்டுமொத்தமாக, அவைகளின் தோற்றம், வளர்ச்சி, பரிமாணம் ஆகியவைகளைக் கோவையாகக் காட்ட முற்படுவதே இந்த மானிடவியல் படிமங்கள் என்ற சிறப்புக் காட்சியின் உள்நோக்கமாகும்.

இவைதவிர, நமது கிராமிய, நாட்டுப்புற மக்களிடம் எளிய முறையில் வெண்கலத்தினாலாகிய கிராமியத் தெய்வங்களின் கலைப் பொருள் படைப்புகள், இம்மக்களின் சமய, தெய்வீக வழிப்பாட்டு முறைகள், அவர்களின் எளிய பண்பாடு நம்மிடமிருந்து எவ்வாறு சற்று வேறுபட்டுள்ளது என்பதையும் இக்காட்சி வெகு தெளிவாகக் காட்டுகிறது.

இவைகளைத் தவிர, நம்மோடும், கிராமிய மக்களோடும் இன்றும் வாழ்ந்து வருகின்ற, நமது காலத்துடன் வாழ்ந்து வருகின்ற, ஆனால் தனித்து மலைக்காடுகளில் வாழ்ந்துவரும் நமது பழங்குடிகளின் படிமங்கள் யாவை? அவைகள் கலைப் படைப்புகளா? சமயத்துடன் கொண்டுள்ள தொடர்பு, நம்மைப்போன்றமக்களால் அவர்களின் கலைக்கு ஏற்பட்ட சிதைவு, ஆகியவைகளையும் ஒருவாறு அறிய முயலுவதே இந்தச் சிறப்புக் கண்காட்சியின் சிறப்பு அம்சமாகும்.

இவை தவிர, வழிபாட்டில் உதவக்கூடிய வெண்கல அரும்பொருள்கள், இசைக்கருவிகள், ஆபரணங்கள், கலயங்கள், வெண்கல விளையாட்டுப் பொருள்கள், ஆகியவையும் காட்சிக்கு வைக்கப்பட்டள்ளன.

சிந்து நதிப் பண்பாட்டு நாகரிகம் தான் இந்தியாவின் வெண்கலக் காலத்தின் உதயத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. சுமார் கி.மு. 3500 ஆண்டுகளுக்கு முன் இந்நதிப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல நடனப் பெண், (மாதிரி உருவம்), செம்புக் கோடாரிகள், அம்பு முனை, தூண்டில் முள் ஆகியவைகளை ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் இந்தியாவின் கங்கை நதிப்புறச் செம்புப் பண்பாடு தமிழகத்திலும் (காலம் சுமார் கி.மு. 4000) பரவியுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் இராமநாதபுர மாவட்டச் சிவந்திப்பட்டியில் நமது அரசு அருங்காட்சியகத்தினால் சில ஆண்டுகளுக்கு முன், காப்பாட்சியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதையல் செம்புக்

**டாக்டர் நே. தேவசகாயம்**
காப்பாட்சியர்
மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை-8

கலவைப் பிடிக்கத்தியும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர, பீகார், பரகுண்டாவில் 1887-இல் திரு. ராபர்ட் புட் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட பெரிய வெண்கலக் கோடாரியும் முதல்முறையாகக் காட்சியில் இடம் பெற்றுள்ளது.

தொடர்ச்சியாக, தென்னகத்தில் வெண்கலக் காலம் இரும்புக் காலத்துடன் கோக்கப்பட்டுள்ளதைத் திருநெல்வேலி ஆதிச்சநல்லூரில் திரு. அலெக்ஸாண்டர் ரே அவர்களால் கண்டெடுக்கப்பட்ட வெண்கலக் கடா, புலி, சேவல், எருமை உருவம் கொண்ட கிண்ணங்கள், வளையல்கள், மணிகள், ஆகியவை விளக்குகின்றன. தவிர, இதில் சிறப்பு இடத்தைப் பெறுவது வெண்கலச் சிறிய தாய் தெய்வப் படிமமாகும். இது வீட்டு வழிபாட்டிற்காக, தெய்வங்களின் உருவங்களைச் செய்து வழிபடும் பழக்கம் தோன்றிய காலத்தைச் சுட்டி காட்டுவது போல உள்ளது. இதன் காலம் கி.மு. 8 முதல் கி.பி. முதல் நூற்றாண்டாகும். அடுத்ததாக, தமிழகத்தில் நீலகிரியில் திரு பிரீக்ஸ் அவர்கள் 1878-ஆம் ஆண்டு தோண்டி எடுத்த வெண்கல மணிகள், கலயங்கள், வளையல்கள், கண்ணுக்கு மை தீட்டும் வெண்கலக் குச்சிகள், மோதிரங்கள் இடம் பெறுகின்றன. இவை தவிர மிகவும் புகழ் பெற்ற தாமரை மலர் போன்ற சித்திர வேலைப்பாடுள்ள வெண்கலக் கிண்ணம், மத்தியத்தரைக்கடலில் கி.மு. 3000 ஆண்டுக் காலத் தங்க கிண்ணத்தைப் போன்றுள்ளதாக இருக்கிறது. இது வெண்கலக் காலத்தின்கலை ஆர்வத்தை மிகச் சிறப்பாகக் காட்டுகிறது.

அடுத்ததாக, உள்ள காட்சிப் பெட்டிகளில், நாட்டுப்புறப் படிமங்களான மதுரை வீரன், முனியன், முனியப்பன், காளி, விநாயகர், மற்றும் பூசாரி உருவங்கள் இடம் பெறுகின்றன. இவை எழும்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்களில் விசாரணை முடிந்து அரசிற்கு உடைமையாக்கப்பட்டவைகளாகும். மற்றும் சில கிராமியப் படிமங்கள் மாவட்டங்களிலிருந்து புதையலாகக் கிடைத்தவையாகும்.

ஒரிஸ்ஸா கோண்டர் பழங்குடிகளின் படிமங்கள், மனித, பறவை, விலங்குகள் உருவத்தினாலானவை. இவை தங்கள் குலக் குறிகளாக வழிபட்டு, திருமண ஊர்வலங்களில் முன்னதாக எடுத்துச் செல்லவும், பின்னர் தங்களின் முன்னோருக்குப் படைப்பதாகவும் கூறப்படுகிறது. பொதுவாக, பழங்குடி மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் தாங்கள் செய்யும் உருவத்தின் வடிவமைப்பில் செலுத்தும் கவனத்தைவிட, கண்ணுக்குத் தெரியாத உட் சக்தியை அப்படிமங்களில் கொண்டுவருவதை, இப்படிமங்களில் காணலாம். கர்நாடகத்தின் பூத ஆலயங்களில், பித்தளை உருவங்கள் இறந்தவர்களையும், பூதங்களையும், சாந்தப்படுத்துவதற்காகப் படைக்கப்படுகின்றன. இவ்வகைப் படிமங்கள் மெழுகு உருக்கு முறையில் தயாரிக்கப்படுகின்றன.



வெண்கலத் தெய்வப் படிமம், ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

பித்தளை மற்றும் வெண்கலத்தினாலான வழிபாட்டுச் சடங்குப் பொருள்களான விஷ்ணு பாதம், சக்கரம், வழிபாட்டு இசைக்கருவிகளான தாளம், சேமங்கலம், பூசாரி கைச்சிலம்பு, விபூதி கிண்ணம் ஆகியவை இக்காலச் சமய நடை முறைகளைக் காட்டுகிறது.

நமது மக்களின் வாழ்க்கை, பொழுதுபோக்கு முறைகளைக் காட்ட வேலூரிலிருந்து பெறப்பட்ட வெண்கல வெற்றிலை உலக்கு, மற்றும் வீட்டு விளையாட்டுப் பொருளான மலபாரின் வெண்கலப் பல்லாங்குழி, தாயம் ஆகியவைகளும் காட்சியில் இடம் பெறுகின்றன.

திருவாச்சுடர், கிரீடம், பூக்கள் ஆகிய விக்கிரகங்களின் வேலைப்பாடான ஆபரணம் 1934-ஆம் ஆண்டு தஞ்சை, நன்னிலம், மணக்கல் கிராமத்தில் புதையலாகக் கண்டெடுக்கப்பட்டவையாகும். இவை தெய்வீக வழிபாட்டுக் கலாச்சாரத்தைக் காட்டுவனவாக உள்ளன.

ஆக மொத்தத்தில், வெண்கலக் காலத்தின் தோற்றம், வளர்ச்சி, பரிமாணத்துடன், நாட்டுப்புற, பழங்குடிகளின் படிமங்களும், நம் நாட்டு மக்களின் சமய, பொழுதுபோக்கு வெண்கலப் பொருள்களும் சேர்ந்து படைக்கப்பட்டுள்ள இந்த 'மானிடவியல் படிமங்கள்' என்ற சிறப்புக் கண்காட்சி முதல் தடவையாக, சிறப்பு அரும்பொருள்களைக் கொண்டு அமைந்திருப்பது கண்ணிற்கு விருந்தாகவும், கல்வி வளர்ச்சிக்கு உதவியாகவும்; அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

# போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகள்

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் 17.7.92 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அலுவலகத்தில் தமிழகத்திலும், குறிப்பாக சென்னை நகரிலும் உள்ள போக்குவரத்து நெரிசலைச் சீரமைப்பது குறித்தும், போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, ஆய்வுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகித்தார்.

தமிழக உள்துறைச் செயலாளர், திரு மலைச்சாமி, போக்குவரத்துத்துறை ஆணையர் திரு. சிவசுப்பிரமணியம், இணைப் போக்குவரத்துத்துறை ஆணையர், துணைப் போக்குவரத்துத்துறை ஆணையர், மண்டல போக்குவரத்து அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளின் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இனி செயல்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன. விரைவில் சென்னை அசோக் நகரில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 2-வது தளத்தில் சென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் அலுவலகம் (மேற்கு) செயல்படும் என்றும், பல்வேறு மாவட்டங்களிலும் இவ்வலுவலகங்களக்காக நிலங்கள் கையகப்படுத்தும் நடவடிக்கை மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நியமனத்தில் நீதிமன்றங்களின் தடையாணை காரணமாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்குவதற்கான வழிவகைகளும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

போக்குவரத்துத் துறை அதிகாரிகளும், அலுவலர்களும் தமிழகம் எங்கும் உள்ள வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவதென்றும், உரிமம் இல்லாத வாகனங்கள், உரிமம் இல்லாமல் வாகனங்களை ஓட்டுதல், வரி கட்டாமல் வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகியவையும் குறிப்பாக மணல், செங்கல் ஆகியவைகளைக் கொண்டுச் செல்லும் லாரிகள் தற்போது வேகக் கட்டுப்பாட்டை மீறியும், ஆபத்தாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டும் நிலையையும் கண்காணிக்க வேண்டுமென்றும் துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில், டிரைவர் சீட்டில் இருவர் பயணம் செய்வது, அதிகக் கட்டணம் கேட்பது, குறைந்த தூரத்திற்கு வர மறுப்பது, பயணிகளிடம் மரியாதைக் குறைவாக நடப்பது ஆகியவைகள் குறித்துக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மேலும், இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை பெருகி வருவதால், சென்னை நகரின் முக்கியச் சாலைகளின் பேருந்து போக்குவரத்து பாதிக்கப்படுவதால், துரிதமாகவும் சொகுசாகவும் பயணம் செய்யும் வகையில் பேருந்துகளை விடுவது பற்றியும் ஆராயப்பட்டது. மேலும், துரிதப் போக்குவரத்திற்கு உதவிடும் மாற்று யோசனைகளைக் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

---

**உங்களுக்குத் தெரியுமா?**

★ சென்ற ஆண்டில் மார்ச் முதல் செப்டம்பர் வரை 4,83,931 வெளிநாட்டினருக்கு இந்தியாவிற்கு வருவதற்காக விசா அளிக்கப்பட்டது.

★ தற்போது இந்தியாவில் 80,000 திபெத் நாட்டினர் அகதிகளாக உள்ளனர்.

★ சென்ற ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை பர்மாவில் இருந்து ஏறத்தாழ 70,000 குடும்பங்களைச் சேர்ந்த 2,10,270 இந்திய வம்சா வழியினர் நம் நாட்டுக்கு வந்துள்ளனர்.

★ நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஐந்தாவது முறையாக 1991-இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

# வேளாண்மைப் பொறியியல் துறையின் சாதனைகள்

**வே**ளாண்மைப் பொறியியல் துறை, தமிழகத்தின் நிலவளம் மற்றும் நீர்வளங்களைப் பாது காத்தல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. இத்துறை கீழ்க்கண்டவகையில் உழவர்களுக்கு உதவி வருகிறது.



1. மண் அரிப்பைத் தடுத்தல் மற்றும் மண்ணில் ஈரம் காத்தல்.
2. பாசன வளங்களை உருவாக்குதல்/நிலைப் படுத்துதல் மற்றும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் சிக்கன நீர் உபயோகத்திற்கு வழிவகுத்தல்.
3. கிணறு, ஏரி, ஆற்றுப்பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்.
4. வேளாண்மைப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்குத் தேவையான பண்ணைக் கருவிகள் குறைந்த வாடகைக்கு அளித்தல்.
5. வளம் குன்றிய பாழடைந்த நிலையிலுள்ள நிலங்களையும், தரிசு நிலங்களையும் மேம்படுத்தி நிரந்தரமாகப் பயன்தரும் மாற்று நில உபயோக முறைகளைப் புகுத்துதல்.

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களை இத்துறை மேற்கொள்கிறது.

மண், நீர்வளப் பாதுகாப்பு, சிறுபாசனம், பாசனப்பகுதி மேம்பாடு, நிலமேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் மேற்கூறிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

**புதிய முயற்சிகள்**
**நுண்ணிய நீர்ப்பாசன முறைகள்**

நீர் உபயோகத்தினை உகந்த அளவிற்கு உயர்த்திடவும், சிக்கனத்தைப் புகுத்திடவும், ஒரு புதிய உத்வேகத்தோடு சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் போன்ற நுண்ணிய நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்தும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை அமைத்துக்கொள்ள முன்வரும் உழவர்களுக்கென ரூ.40.01 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. உழவர்களைக் கவரும் வகையில் மானிய விகிதங்களையும் அரசு மாற்றியமைத்துள்ளது.

**நிலப்பரப்பு மானிய விகிதம் மானிய அளவு**

1. ஒரு எக்டேர் வரையில் 50சதவிகிதம் ரூ.12,500/எக்டேர்
2. ஒரு எக்டேருக்கு மேல் 2 எக்டேர் வரை 40 சதவிகிதம் ரூ.10,000/எக்டேர்
3. 2 எக்டேருக்கு மேல் 3 எக்டேர் வரை 30 சதவிகிதம் ரூ.7,500/எக்டேர்

உழவர்களிடையே இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. 301 உழவர்கள் இத் திட்டத்தின் மூலம் 1991-92-இல் பயனடைந்

**மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணில் ஈரம் காத்தல், பாசன வளங்களை உருவாக்குதல், நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் சிக்கன நீர் உபயோகத்திற்கு வழி வகுத்தல் முதலான பணிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை உறுதுணையாக உள்ளது.**

துள்ளனர். மேற்கூறிய மானிய விகிதத்தில் 1992-93-ஆம் ஆண்டு சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் அமைத்து பயனடைய இருக்கும் உழவர்களுக்கு அரசு ரூ.187.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தரமான பொருட்களை உபயோகப்படுத்தவும், தங்கு தடையில்லாமல் நீர்ப்பாசன அமைப்புகள் இயங்கவும், உழவர்களுக்குப் பயற்சி தரவும், விரிவான முறையில் நடைமுறைகளை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது.

தோட்டக்கலை வளர்ச்சிக்கென, சொட்டு நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்திட மத்திய அரசு நிதியுதவியோடு, ரூ.101.57 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும், தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க முன்வரும் உழவர்களுக்கு 50 சதவிகிதம் மானியத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 457 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

மாநிலத்தில் அதிக பரப்பளவு மானாவாரி நிலங்கள் மண் அரிப்பிற்கு உட்பட்டு நிலச் சீரழிவிற்கு இலக்காகின்றன. மண்ணைப் பாதுகாத்து நீர்வளத்தைப் பராமரித்து உற்பத்தித் திறனை உயர்த்தவேண்டியது மிக அவசியத் தேவையாக உள்ளது. மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளின் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 1991-92-இல், 76,462 எக்டேர் நிலங்களும் இவ்வாண்டு மே மாதம் முடிய 8,248 எக்டேர் நிலங்களும் பயனடைந்துள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் 1991-92-இல் 454 எக்டேரிலும், இவ்வாண்டு 11 எக்டேரிலும் செயல்படுத்தியுள்ளது. மேலும் இப்பணிகள் குந்தா மற்றும் கீழ்பவானி பகுதிகளில் நதிப்பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 7,596 எக்டேரிலும் இவ்வாண்டு 465 எக்டேரிலும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1991-92-இல் 1,573 எக்டேரிலும் இவ்வாண்டு 67 எக்டேரிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 1,648 எக்டேரிலும், இவ்வாண்டு 130 எக்டேரிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

காற்றரிப்புத் தடுப்புத் திட்டத்தின் மூலம் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் 1991-92-இல் 1,007 எக்டேரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் 4,063 எக்டேர் நிலப்பரப்பில் மேற்கொண்ட மண்வளப் பாதுகாப்புத் பணிகளினால் 1991-92-இல் 4,457 ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிடப் பழங்குடியைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

## தேயிலையிலிருந்து மூலிகை

தேயிலையிலிருந்து மூலிகை மருந்துகளைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் கல்கத்தாவிலுள்ள தேயிலை ஆராய்ச்சிச் சங்கம் ஈடுபட்டுள்ளது. தேயிலையில் வைட்டமின் B-12, புரோட்டீன், தாது உப்புக்கள், வைட்டமின்-சே ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஜப்பானில், தேயிலைச் சாற்றிலிருந்து இரத்த அழுத்தம், கொழுப்புச் சத்து ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய மாத்திரைகள் தயாரித்து விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

**நில மேம்பாடு**

வேளாண்மைப் பொறியியல் துறை நிலத்தைச் சமன்படுத்தி பயன்படுத்தவும், இயந்திரங்களைக் கொண்டு உழுவதற்கும் நில மேம்பாட்டுத் இத் திட்டத்தின் கீழ், உழவர்களுக்கு 115 புல்டோசர்கள் மூலம் 1991-92-இல் 1,72,062 மணிகளும், இவ்வாண்டு 42,589 மணிகள் பணி செய்தும், 177 உழுவைகள் (டிராக்டர்கள்) மூலம் 1991-92-இல் 1,15,021 மணிகளும், இவ்வாண்டு 12,370 மணிகள் பணி செய்தும் சாதனை படைத்துள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை புல்டோசர்கள் மூலம் 1991-92-இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்துச் சீரமைக்கும் பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ளது. கும்பகோணம் மகாமகம் குளத்தில் தூர் எடுக்கும் பணியினையும் வேளாண்மைப் பொறியியல் துறை புல்டோசர்கள் மூலம் குறுகிய காலத்தில் நிறைவேற்றிப் பாராட்டினையும் பெற்றது.

**சிறுபாசனம்**

இத்திட்டத்தில் சிறுபாசனக் கருகிகளாகிய வேளாண்மைப் பொறியியல் துறையின் 157 ஆழ்துளைக் கருவிகள், 92 பாறைவெடி மற்றும் 46 நீள் துளைக் கருவிகள், 387 கைத்துளைக் கருவிகள், 17 காற்றழுத்தக் கருவிகள், 25 மின் தடைக் கருவிகள் மற்றும் 2 மின் அளவியல் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி 1991-92-இல் 5,823 குழாய்க் கிணறுகளும், 3,501 வடிமுனை குழாய் கிணறுகளும் 6,011 கிணறுகளில் நீர் பெருக்கத்தை உண்டாக்க கிணற்றுக்குள் குழாய்க் கிணறு அமைத்தும், கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளும் செய்து வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது. இவ்வாண்டு 1,074 குழாய்க் கிணறுகளும், 714 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைத்து, 1,135 கிணறுகளில் நீர்ப்

## குடும்ப அட்டை தொடர்புடைய கோரிக்கைகளுக்காக...

சென்னை நகரில் உதவி ஆணையர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகங்களில் சில இடைத்தரகர்கள் வெளியிலிருந்து செயல் படுகின்றனர் என்றும், அவர்கள் அங்கீகரிக்கப் படாத விண்ணப்பப் படிவங்களை விற்கின் றார்கள் என்றும் புகார்கள் பெறப்படுகின்றன.

இந்த இடைத்தரகர்களை நீக்கவிட்டு நிர்வாகத் தைச் சீரமைக்கும் வகையில் குடும்ப அட்டை, ஒப்புவிப்புச் சான்றிதழ், நீக்கல் சான்றிதழ் மற்றும் கடை, வருமானம், முகவரி மாற்றம் கோரி மனு செய்பவர்களுக்கென்று அச்சடிக்கப்பட்ட விண் ணப்பப் படிவங்கள், தொடர்புடைய உதவி ஆணையர் அலுவலகங்களில் விற்பனைக்கென்று வைக்கப்பட்டுள்ளன. மேற்படி படிவம் ஒன்றின் விலை ரூபாய் ஒன்று ஆகும். மேற்படி படிவத்தில் நீதிமன்றக் கட்டண வில்லை ஒட்ட வேண்டிய அவசியமில்லை. பொதுமக்கள் குடும்ப அட்டை தொடர்புடைய கோரிக்கைகளுக்காக மேற்படி அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மண்டல உதவி ஆணையர் அலுவலகங் களிலிருந்து பெற்று உபயோகிக்கும்படியும், இடைத் தரகர்களை ஊக்குவிக்காமல் இருக்கும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

பெருக்கத்தை உண்டாக்கியும் வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

### சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை கிணறுகள் அமைக்க, ஆழப்படுத்த சிறு, குறு மற்றும் மலை வாழ் விவசாயிகளுக்கு முறையே ரூ.3,000, ரூ.4,000 மற்றும் ரூ.5,000 மானியம் வழங்கப் பட்டு 1991-92-இல் 5,232 விவசாயிகள் பயன டைந்துள்ளனர். மொத்தம் ரூ.105 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்

காவிரி, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக் குளம், ஆழியாறு, பெரியார்-வைகை பாசனப் பகுதிகளில் 1991-92-இல் 47,576 எக்டேர் பரப்பளவிலும், இவ்வாண்டு 8,197 எக்டேர் பரப்பளவிலும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் காவிரி, கீழ்பவானி, பெரியாறு- வைகை பாசனப் பகுதிகளில் 1991-92-இல் 15,493 எக்டேர் பரப்பளவில் சுழற்சிமுறை நீர் பங்கீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1991-92-இல் 187 கசிவு நீர்க் குட்டைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 10.926 இலட்சம் மனித வேலை நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டன. இவ்வாண்டு இது வரை 237 கசிவு நீர்க்குட்டைப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு 10.258 இலட்சம் மனித வேலை நாட்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

### சிறப்புத் திட்டங்கள்
### மானாவாரி விவசாயத்திற்கெனத் தேசிய நீர்வடிப் பகுதி முகடு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 594 நீர் வேகக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு முடிவடைந்துள்ளன.

### ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம்

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் டானிடா உதவியுடன் 1991-92-இல் தரம் பாதிக்கப்பட்ட 1,650 எக்டேர் நிலப்பரப்பில் நீர்ப்பிரி முகடு மேம் பாட்டுப் பணிகளும், 1,110 எக்டேர் நிலப் பரப்பில் காற்றரிப்புத் தடுப்புத் திட்டப் பணி களும், 1,028 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நிலமேம்பாட்டுப் பணிகளும், 2,140 எக்டேர் நிலப்பரப்பில் தேரிநில மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு இப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

### பண்ணை இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்

விவசாய இயந்திரங்களை இயக்கவும், அதனைப் பராமரிக்கவும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு திருச்சி, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டு 1991-92-இல் 157 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பண்ணை இளைஞர்களுக்கும் உதவும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

# நிலவிற்குச் செல்லலாம்!

(புலவர் க. அண்ணாமலை)

வட்ட நிலா வானிலே
வருகுது பார் தம்பிநீ
சுட்ட தோசை போலவே
தோன்றும் அந்த வெண்ணிலா
கெட்டிக் கார தம்பிநீ
கையில் பிடிக்க ஓடிவா
எட்டிப் பிடிக்க முயன்றிடு
ஏணி கொண்டு வந்திடு
நம்ப மாட்டேன் பாட்டிநீ
நாளும் சொல்லும் கதையிது
எம்பும் இராக்கெட் கொண்டுவா
ஏறிச் சென்று பறக்கலாம்
நீண்ட பயணம் செய்யலாம்
நிலவில் காலை வைக்கலாம்
புதுமை பலவும் பார்க்கலாம்
பூமியில் வந்து சேரலாம்!





○ எல்லாவிதப் படிப்பும், எல்லாப் பயிற்சிகளும் மனிதனை மனிதனாக உருவாக்குவதற்குத்தான்.

○ 'நான்' 'எனது' என்பவை மூட நம்பிக்கைகளாகும்.

○ எளிமையில்தான் வெற்றி இரகசியம் அடங்கி இருக்கிறது.

○ கருத்துக்களை எடுத்துச் செல்லும் ஒரு வாகனமே மொழி.

## தெரிந்து கொண்டால் நல்லது

இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும், அதன் தலைநகரங்களும் வருமாறு:

| | |
|---|---|
| ஆந்திரப்பிரதேசம் - | ஐதராபாத் |
| பீகார் - | பாட்னா |
| ஹரியானா - | சண்டிகர் |
| ஜம்மு, காஷ்மீர் - | ஸ்ரீநகர் (கோடை) ஜம்மு (குளிர்) |
| கேரளா - | திருவனந்தபுரம் |
| மணிப்பூர் - | இம்பால் |
| நாகாலாந்து - | கோஹிமா |
| ராஜஸ்தான் - | ஜெய்பூர் |
| திரிபுரா - | அகர்தலா |
| அருணாச்சலப் பிரதேசம் - | இடாநகர் |
| கோவா - | பானாஜி |
| இமாசலப்பிரதேசம் - | சிம்லா |
| மத்தியப்பிரதேசம் - | போபால் |
| மேகாலயா - | சில்லாங் |
| ஒரிஸ்ஸா - | புவனேஸ்வர் |
| சிக்கிம் - | காங்டாக் |
| உத்தரப்பிரதேசம் - | லக்னோ |
| அஸ்ஸாம் - | திஸ்பூர் |
| குஜராத் - | காந்திநகர் |
| கர்நாடகா - | பெங்களூர் |
| மகாராஷ்டிரா - | பம்பாய் |
| மிசோராம் - | ஐஜால் |
| பஞ்சாப் - | சண்டிகர் |
| தமிழ்நாடு - | சென்னை |
| மேற்கு வங்காளம் - | கல்கத்தா |

### யூனியன் பிரதேசங்கள்

அந்தமான், நிகோபார் - போர்ட் பிளேயர்
தத்ரா நகர் ஹவேலி - சில்வாஸா
டாமன் டயூ - டாமன்
இலட்சத் தீவுகள் - கவரத்தி
சண்டிகர் - சண்டிகர்
டெல்லி - டெல்லி
பாண்டிச்சேரி - பாண்டிச்சேரி

## உலகிலேயே மிக ஆழமான ஏரி!

உலகிலேயே மிக ஆழமான ஏரி எது?

அதுதான், ரஷ்யாவில் உள்ள பைக்கால் ஏரி.

இது பனி சூழ்ந்த சைபீரியாவில் உள்ளதால் இதை 'சைபீரியாவின் முத்து' என்று அழைக்கின்றனர். இந்த ஏரியைப் 'புனித ஏரி' என்றும் 'வாழும் அருங் காட்சியகம்' என்றும் அழைக்கின்றனர்.

பைக்கால் ஏரியின் உயர்ந்தபட்ச ஆழம், 1,637 மீட்டர் அதாவது ஒரு மைலுக்கும் மேல் ஆழம் உள்ளது இது!

இந்த ஏரிக்குள் 36 நதிகளும், சிற்றோடைகளும் கலந்து கலக்கின்றன.

இந்த ஏரியில் 27 தீவுகள் உள்ளன. விஞ்ஞானிகளின் ஆய்வுக்கூடமாகத் திகழும் இந்த ஏரியின் அடியில் வெப்ப நீரூற்றுக்கள் உள்ளன.

உலகில் எங்கும் இல்லாத 1,500 வகையான உயிரினங்கள் இங்கு உள்ளன. இங்கு மட்டும் 60,000 சீல்கள் எனப் படும் பிராணிகள் வாழ்கின்றன!

இந்த ஏரி ஆறு மாதம் நீர்ப்பரப்பாக இருக்கும்; ஆறு மாதம் பனிக்கட்டியாக உறைந்து விடும்!

இந்த ஏரியின் கரையில் வளரும் ஒரு வகைப் புல்லுக்குத் 'தெய்வப்புல்' என்று பெயர்.

—ஆதாரம்: 'தினமணி'



# தோட்டக்கலைத்துறையின் சாதனைகள்

**1991-92-ஆம் ஆண்டு தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 74.27 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவற்றில் பழங்கள் உற்பத்தி 31.54 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவை 1990-91-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களில் 10.5 சதவிகிதம் அதிகமாகும். இதுபோன்றே காய்கறிகளின் உற்பத்தி 37.46 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவை 1990-91-ஆம் ஆண்டின் சாதனையைவிட 12 சதவிகிதம் அதிகமாகும்.**

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பழங்கள், காய்கறி உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு அடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1991-92-ஆம் ஆண்டுதோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தி 74.27 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை களில் பழங்கள் உற்பத்தி 31.54 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை 1990-91-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களைவிட 10.5 சதவிகிதம் அதிகமாகும். இதுபோன்றே காய்கறிகளின் உற்பத்தி 37.46 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை 1990-91-ஆம் ஆண்டின் சாதனையை விட 12 சதவிகிதம் அதிகமாகும்.

தோட்டக்கலைத் துறையின் மூலம் 1. ஒருங்கிணைந்த தோட்டக் கலை வளர்ச்சித் திட்டம். 2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம், 3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், 4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 5. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், 6. பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் ஆகிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி 12,000 எக்டேர் பரப்பளவில் நிலையான தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்குக் கொண்டு வரப் பட்டது.

கிராமப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஊட்டச் சத்துள்ள பழங்கள் கிடைக்கும் வகையில் கிராமப்புறங்களில் ஊட்டச்சத்துத் தோட்டம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 37,500 குடும்பங்கள் பயன்பெற்றனர். இத்திட்டத்திற்காக ரூ.18.70 இலட்சம் செலவிடப்பட்டது.

காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வீரிய இரகக் காய்கறி சிறுதளைகள் வேளாண்

பெருமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ரூ.2 .37 இலட்சம் செலவிடப்பட்டு 3,200 விவசாயிகள் பயனடைந்தனர். இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ.10.50 இலட்சத்தை அதிகமாக ஒதுக்கியுள்ளது.

பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம் பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2,600 பழங்குடி மக்களுக்குப் பழத்தோட்டங்கள் இலவசமாக அமைத்துத் தரப்பட்டது. இத்திட்டத்திற்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.82 இலட்சம் செலவிடப்பட்டது.

பழைய தோட்டங்களில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பழைய தோட்டங்கள் புனரமைப்புத் திட்டம் 1991-92-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மா, கொய்யா, எலுமிச்சை போன்ற பழத்தோட்டங்கள் 600 எக்டேர் பரப்பளவில் புனரமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.7.64 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து 50 முன்னோடித் தோட்டக்கலை விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அண்டை மாநிலங்களில் அதிக அளவில் காய்கறி, பழங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளுக்கு நவீன சாகுபடி செய்யும் முறையை அறிந்து கொள்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேசிய தோட்டக்கலை வாரிய உதவியுடன் தோட்டக்கலை விளை பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்புக் கிடங்குகள் கட்ட, விளை பொருட்களை விளையுமிடத்திலிருந்து எடுத்து தொலைவிலுள்ள இடங்களுக்கு விற்பனை செய்ய உதவும் வகையில் லாரி வாங்க, மேலும் தோட்டக் கலைப் பொருட்கள் அழுகாமல் பாதுகாக்க குளிர்ப்பதன அறைகட்டுதல், ஆகிய வசதிகள் செய்ய தமிழக அரசு மானியம் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் மாங்கனிகளின் உற்பத்தியை அதிகமாக்கும் நோக்கத்துடனும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தியாகும் பல வகைப்பட்ட மாங்கனிகளைத் தமிழ்நாடு வேளாண் மக்கள் காண்பதற்காகவும், கிருஷ்ணகிரியில் அகில இந்திய மாங்கனி விழா, தமிழக அரசினால் நடத்தப்பட்டது. இம்மாங்கனி விழாவில் கருத்தரங்கும் நடத்தப்பட்டது. மேலும் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் ஏர்க்காடு ஆகிய இடங்களில் மலர்க் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

53 தோட்டக்கலைப் பண்ணைகள் இத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தோட்டக்கலைப் பண்ணைகளில் பல்வேறுபட்ட தோட்டக்கலைப் பயிர்கள் 202 இலட்சம் எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்பட்டு, பல்வேறு திட்டங்களின் மூலம் வேளாண் மக்களுக்கு வழங்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் தோட்டக்கலைத் துறையில் பல்வேறு திட்டங்கள் ரூபாய் 11 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன.

## 80 ஆயிரம் குழந்தைகளுக்குத் தடுப்பூசி

சென்னை மாநகராட்சி இந்த ஆண்டு சென்னை நகர எல்லைக்குள் 80 ஆயிரம் குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போட ஏற்பாடுகள் செய்துள்ளது என சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா.பூர்ணலிங்கம் தெரிவித்தார்.

அவர் 29.7.92 அன்று தண்டையார்ப்பேட்டை நேத்தாஜி நகர் சீதக்காதி நகர் மெட்ரிக்குலேசன் பள்ளியில் தட்டம்மைத் தடுப்பூசி முகாம் ஒன்றைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் இதை அறிவித்தார். அவர் மேலும் பேசுகையில், நம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகளுள் முக்கியமானது மக்கள் தொகைப் பெருக்கம் தற்போது 85 கோடி மக்கள் தொகையுடைய நம்நாடு கி.பி. 2025-இல் 150 கோடியாக அதிகரிக்கும் என்று தெரிவித்து, மக்கள்தொகைக் குறைப்பு மிகமிக அவசியம் என்றார். சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சம் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து சிகிச்சையளிக்கப்படும் என்றும், அனைத்து முதல் வகுப்பு மாணவர்களுக்கும் இது செய்யப்பட்டு விட்டது என்றும், மற்ற வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் செய்து முடிக்கப்படும் என்றும் கூறினார்.

அரிமாச் சங்க மாநில ஆளுநர் திரு. கே.ஜே. தாமஸ் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய டாக்டர் ஆர்.நஞ்சுண்டராவ் அவர்கள், இந்தியாவில் இண்டு கோடி குழந்தைகளைத் தட்டம்மை தாக்குகிறது. இதில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மரணம் ஏற்படுகிறது. இக்கொடுமையைத் தடுக்க 7-வது மாதத்தில் குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போட வேண்டும். 130 குடிசைப் பகுதிகளைத் தத்தெடுத்து அங்கு வாழும் மக்களுக்கு நலக் கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இருக்கிறோம் என்று கூறினார்.

டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணா நன்றி கூறினார். சென்னை மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு. ச. சந்திரமௌலி, இந்திய மக்கள் தொகைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஹைமா பாலசந்தர், மாநகராட்சித் தலைமைப் பொறியாளர் திரு. கா.பா. விப்ரதாஸ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.



# காந்திய நெறியில் கலைவாணர்

—புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணல் காந்தியடிகளிடமும் காந்திய நெறியிலும் மிகுந்த பற்று வைத்திருந்தார் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். தமது நாடகங்களிலும் திரைப்படங்களிலும் சொற்பொழிவுகளிலும் காந்தியக் கொள்கையை நீண்ட நெடுங்கால மாகவே அவர் வலியுறுத்தி வந்தார். காந்திய நெறிகளைப் பிரச்சாரம் செய்வதில் அவர் தன்னிகரற்றவராக வும் விளங்கினார். கிந்தனார் கதாகாலட்சேபம் போல காந்தி மகான் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை யும் அவர் வெற்றிகரமாக நடத்தி வந்தார். அண்ணலிடம் அவர் கொண்டிருந்த அன்புக்கு அளவே இல்லை.

இந்திய விடுதலை இயக்கத்தில் அண்ணல் பற்பல அற்புதங்களை உருவாக்கி, மக்களை எல்லாம் நாட்டு விடுதலை உணர்வுக்கு ஆளாக்கி வந்த சமயத்தில், தமிழகத் தில் பல நாடக ஆசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் நாடகங் களின் மூலம் தேச பக்தியை வளர்த்து வந்தார்கள். பலர், தேச பக்திப் பாடல்களை எழுதியும் பாடி யும், மகிழ்ந்தார்கள்; மகிழ்வித் தார்கள். அதன் காரணமாக நடிகர் பலர் அந்நிய ஏகாதிபத்திய அரசி னால் கைது செய்யப்பட்டனர்; நாடகங்கள் பல தடை செய்யப் பட்டன.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா, ஸ்காட்லாந்து நவீனம் ஒன்றை அடித்தளமாக வைத்து, தேச பக்தியை வலியுறுத்தும் 'பாணபுரத்து வீரன்' என்னும் நாடகத்தை நூல் வடிவில் தீட்டியிருந்தார். அந்நாடகத்தின் அருமையை உணர்ந்த டி.கே.எஸ். சகோதரர்கள் 'தேசபக்தி' என்னும் தலைப்பில், அதனை 1931- ஆம் ஆண்டில் அரங்கேற்றம் செய்தனர். டி.கே.எஸ். சகோதரர்கள், கே.ஆர். ராமசாமி ஆகியோருடன் கலை வாணரும் அந்நாடகத்தில் நடித்து வந்தார். நாடகம் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. விடுதலை இயக் கத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கு அந்த நாடகம் தூண் டியது.

நாடகத்தின் இறுதிக் காட்சியில், கதாநாயகனான பாணபுரத்து வீரன், ஊர்க் குடிமக்களை விடுதலைப் போருக்கு ஆயத்தம் செய்வான். அப் போது குடிமக்கள் அனைவரும் தம் கைகளில் கிடைத்த பொருள்களை எல்லாம் ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு வருவார்கள். கம்பு, கட்டாரி, கோடரி, கடப்பாரை, அரிவாள் போன்ற ஆயுதங்களை ஏந்தியவாறு குடிமக்கள் வேடம் போட்ட நடிகர்கள் மேடைக்கு வரு வார்கள். கடைசிக் குடிமகனாகக் கலைவாணர், தன் கையிலே கைராட்டினத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டு மேடைக்கு வந்து, 'இந்த ராட்டினத்தை வச்சே ஏகாதிபத்திய வெறியர்களை நாட்டை விட்டே ஓட்டிடுறேன்' என்று கூறுவார். 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்த மொன்று' செய்து, கைராட்டை யினாலேயே வெள்ளையரை ஓட்டி விடலாம், என்று முழங்கிய அண்ண லின் கொள்கையை நாடகத்தில் தக்க வகையில் புகுத்திப் பொதுமக்களி டம் சபாஷ் பெற்றார் கலைவாணர்.

இந்தியத் திருநாடு அந்நியரின் பிடியிலிருந்து விடுபடுவதற்குரிய நாள் நெருங்கிக் கொண்டிருந்த சமயம். நாடெங்கும் தேச உணர்வு மிக்க நாடகங்கள் - திரைப்படங்கள் உருவாகி வந்தன. கலைவாணர் தமது நாடக மன்றத்தின் மூலமாக 'நாம் இருவர்' என்னும் தேச உணர்வு மிக்க நாடகத்தை நடத்து வதற்கு ஏற்பாடு செய்து கொண்டி ருந்தார். அந்த நேரத்தில் எதிர் பாராமல் கிரிமினல் வழக்கொன் றின் காரணமாக அவர் சிறைத் தண்டனை பெற்றார். அதனால் நாடகம் டி.ஏ. மதுரம் அவர்களின் முயற்சியால் அரங்கேற்றம் செய்யப் பட்டது. சென்னை ஒற்றை வாடை அரங்கில் பல மாதங்களாக அந் நாடகம் நடைபெற்று வெற்றிக் கொடியை நாட்டியது. பின்னர் ஏ.வி.எம். நிறுவனத்தார் அந்நாடகத் தைத் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டுப் பொதுமக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றனர். நாம் இருவரின் சிறப்புக்குக் கலை வாணரும் காரணமாக இருந்தார் என்பது அடிப்படை உண்மை.

நாடு முழுவதும் மதுவிலக்கு நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அண்ணல் காந்தியடிகள் முனைப்புக் காண்பித்து வந்தார். அவரது தலையாய கொள்கைகளில் மதுவிலக்கும் ஒன்றாகும். 1947 அக்டோபர் 2-ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட வாரியாக மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப் பட்டு வந்தது. குடிப்பழக்கத்தின் கொடுமையைத் தலைவர்கள் அவ் வப்போது மேடையில் எடுத்துரைத்து மக்களுக்கு அறிவூட்டி வந்தார்கள். கலைவாணர், மதுவிலக்கின் அவசி

யத்தை எடுத்துரைப்பதற்காக ஒரு திரைப்படத்தையே தயாரித்தார். பேரறிஞர் அண்ணா அவர்களால் கதை, வசனம் எழுதப்பட்ட 'நல்ல தம்பி' என்னும் அந்தப் படத்தில், அண்ணல் வலியுறுத்திய மது விலக்குக் கொள்கையை, மண்ணுலகில் மட்டுமின்றி தேவருலகுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார் கலைவாணர்! ஜமீன் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற - அண்ணலின் கொள்கைகள் பலவற்றை அந்தத் திரைப்படத்தில் காட்சிகளாக்கிக் காண்பித்தார் கலைவாணர்.

பட முதலாளிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு திரைப்படத்தில் நடித்து வந்தவர்தான் கலைவாணர் என்றாலும் சம்பாதித்த பணத்தைத் தானும் தன்னைச் சார்ந்தவர்களும், மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்னும் சுயநலப் பண்பு படைத்தவரல்லவர் அவர். இல்லை என்று வந்தவர்களுக்கெல்லாம் அள்ளி வழங்கிய வள்ளல் அவர்.

அண்ணல் காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர், அவரது நினைவைப் போற்றும் வகையில், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்து, தமது ஊரான நாகர்கோவிலில் ஒரு நினைவுத் தூணை எழுப்பினார் கலைவாணர். அண்ணலும் மறைந்து விட்டார். அவருக்கு நினைவுத் தூண் எழுப்பிய கலைவாணரும் மறைந்து விட்டார். ஆனால் அந்தத் தூண் இன்றும் நிலைத்து நிற்கிறது. அண்ணலின் மீது கலைவாணருக்கு இருந்த பற்று, பாசம், அன்பு, மரியாதை ஆகியவற்றைக் காவியம்போல நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அண்ணல் காந்தியடிகள் வெள்ளிக் கிழமையன்று மறைந்தார். காந்தியத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த கலைவாணர், அப்போது ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதிலே அவர் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

'வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஞாயிற்றுக் கிழமை அரசு விடுமுறை நாளை மாற்றி இனிமேல் காந்தியடிகள் மறைவெய்திய வெள்ளிக் கிழமையை விடுமுறை நாளாக்க வேண்டும்' என்பது தான் அந்த வேண்டுகோள்.

அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அண்ணல் காந்தியடிகள் மறைவெய்திய வெள்ளிக் கிழமையில் தான் கலைவாணரும் மறைந்தார்.


(கலைவாணர் நினைவு நாள்: ஆகஸ்டு — 30)

முன்ஷி பரமு பிள்ளை என்னும் மலையாள எழுத்தாளரின் சமூகக் கதை ஒன்றை மணமகள் என்ற பெயரில் திரைப்படமாக்கினார் கலைவாணர். படத்தை அவரே இயக்கவும் செய்தார். அத்துடன் ஊருக்கெல்லாம் அறிவுரை கூறி அன்பு நெறியைப் போதித்து வரும் ஆசிரியர் பாத்திரத்தை ஏற்று நடித்தார். படம் வெளிவந்த பின்னர், அதனைப் பொதுமக்களின் முன்னிலையில் நாடகமாகவும் நடத்தி வந்தார். நாடகத்தில் அவர், ஆசிரியர் பாத்திரத்தை ஏற்க வில்லை. வில்லன் பாகவதரின் நண்பனாக வேடம் தாங்கி நடித்தார். நாடகத்தில் ஒரு கட்டம்.

தீய காரியம் ஒன்றைச் செய்வதற்குக் கலைவாணரிடம் யோசனை கேட்பான் அந்த வில்லன். கலைவாணர் யோசனை சொல்வதற்கு முயற்சிப்பார். அப்போது ஏதோ ஒன்று தடை செய்வது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படும். உடனே மேடையில் சுற்று முற்றும் பார்ப்பார். அங்கே அண்ணல் காந்தியடிகளின் மார்பளவு உருவச் சிலை ஒன்று இடம்பெற்றிருக்கும். அண்ணலின் கருணை பொங்கும் விழிகளும் அமைதி தவழும் முகமும் கலைவாணரின் மனத்தில் சங்கடத்தை ஏற்படுத்தும். உடனே சிலையை மேடையிலுள்ள திரைச் சீலையின் பக்கம் பார்க்குமாறு திருப்பி வைத்துவிட்டு யோசனை சொல்லத் தொடங்குவார். அப்போதும் அவருக்கு மனஉறுத்தல் தோன்றும்; பின்னர் ஒரு துணியைக் கொண்டு சிலையின் முகத்தை மறைப்பார். மறுபடி யோசனை சொல்வதற்கு முனைவார். அப்போதும் அவருக்கு உறுத்தல் இருந்து கொண்டே இருக்கும். உடனே அண்ணலின் உருவச் சிலையை இருகைகளாலும் அப்படியே எடுத்து, மேடையை விட்டு அப்புறப்படுத்தி - கண்பார்வைக்குத் தெரியாத இடத்தில் வைத்துவிட்டுத் திரும்பி வருவார். 'இப்பக் கேளு! யோசனை சொல்றேன்' என்பார் தனது நண்பனான வில்லனிடம்.

## தெருவிளக்குகளை எரிய வைப்பதில் தீவிர கவனம்

தெருவிளக்குகளை எரிய வைப்பதில் சென்னை மாநகராட்சி தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. விளக்குகள் எரியவில்லை எனப் புகார்கள் ஏதேனும் வந்தால் அவை உடனடியாகக் கவனிக்கப் பட்டு வருகின்றன.

குடிசைப் பகுதிகளில் விளக்குகள் சரியாக எரியவில்லை என்று புகார் வந்ததன் காரணமாக குடிசைப் பகுதிகளில் விளக்குகளை எரியச் செய்வ தற்குத் தீவிரத் திட்டம் ஒன்றைத் தீட்டி சென்னை மாநகராட்சி கடந்த சில நாட்களாகச் செயல் படுத்தியது.

இந்தத் திட்டத்தில் 590 குடிசைப் பகுதிகளில் மொத்தமுள்ள விளக்குகள் 8,000 ஆகும். இந்த 8,000 விளக்குகளிலுள்ள குறைபாடுகளை நீக்கி, அவை அனைத்தையும் எரியும்படி சென்னை மாநகராட்சி செய்துள்ளது. இதற்குத் தனியாக ஆட்களும், வண்டிகளும் ஒதுக்கப்பட்டு, மின் துறையின் உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இதுமட்டுமல்லாது, குடிசைப் பகுதிககளில் முக்கிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. குழல் விளக்குகள் பொருத்தப்பட்டால் ஓர் ஆண்டுக் காலமே எரி யும், அதற்கு மாறாக இந்தச் சோடியம் ஆவி விளக்குகள் மூன்று ஆண்டுக் காலம் பயன் அளிக்கும். அதிக வெளிச்சத்தையும் தரும். இதன் மூலம் குடிசைப் பகுதிகளில் அதிக ஒளி பெற வாய்ப்புள்ளது. இன்னும் 100 சோடியம் ஆவி விளக்குகளைக் குடிசைப் பகுதிகளில் பொருத்து வதற்குச் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை மாநகரில் மொத்தம் 60,000 விளக்குகள் இருக்கின்றன. இப்பொழுது எரியாத விளக்குகளின் எண்ணிக்கை 2,600 மட்டுமே யாகும். இது மொத்த விளக்குகளில் 4.2 சதவிகித மாகும். தீவிர செயல்பாட்டிற்குப் பிறகு சுமார் 25 சதவிகிதம் எரியாமல் இருந்த தெருவிளக்குகள் 4.2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதில் திருவல்லிக்கேணி மண்டலம் முன்னணியில் இருக்கிறது. இந்த மண்டலத்திலுள்ள மொத்த விளக்குகள் 4,439 ஆகும். இதில் எரியாத விளக்குகள் 115 மட்டுமேயாகும். இந்த மண்டலத் தில் எரியாத விளக்குகள் 2.6 சதவிகிதமாக இருக்கிறது. இது ஒரு சாதனையாகும்.

பூந்தமல்லி நெடுஞ்சாலை, அண்ணா சாலை, ராஜாஜி சாலை, காமராசர் சாலை ஆகிய சாலைகளில் மின் ஒளியை அதிகரிக்கத் திட் டங்கள் தீட்டப்பட்டுள்ளன. ராஜாஜி சாலை, காமராசர் சாலைகளில் புதிய சோடியம் ஆவி விளக்குகள் ஏற்கெனவே பொருத்தப்பட்டுள்ளன. இதே போன்று அண்ணா சாலையிலும் புதிய சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாது ராஜாஜி சாலை, காமராசர் சாலைகளில் நடுவில் மின் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. இதனைச் செய்து முடித்தால், இந்தச் சாலைகளில் வெளிச்சம் கணிசமான அளவுக்கு அதிகரிக்கும்.

பேருந்து செல்லும் சாலைகள் அனைத்திலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் இவை செய்து முடிக்கப் படும்.

காந்தியடிகளின் பொம்மை அருகில் இருந்தால் கூட, தீய எண்ணம் ஒருவருக்கு உருவாகாது என்பதை, எடுத்துக்காட்டு உவமை அணிபோலக் குறிப்பால் உணர்த் தினார் கலைவாணர். (இக் காட்சி திரைப்படத்தில் கிடையாது; நாடகத் திற்கென்றே கலைவாணரால் அமைக்கப்பட்டது.)

இந்திய நாட்டிலிருந்து ருஷ்ய நாட்டிற்கு 1950-ஆம் ஆண்டில் சென்ற கலைக்குழுவில் தமிழகத்தின் சார்பில், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம், டைரக்டர் கே. சுப்ரமணியம், ஒளிப்பதிவாளர் நிமாய்கோஷ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ருஷ்யாவில் ஒரு பொதுக் கூட் டத்தில் கலைவாணர் சொற்பொழி வாற்றினார். அவர் தமிழில் ஆற்றும் உரையை கே. சுப்ரமணியம் ஆங் கிலத்தில் மொழி பெயர்க்க, ஆங்கில உரையைக் கேட்டு ருஷ்யர் ஒருவர், ருஷ்ய மொழியில் பெயர்த்து வந்தார்.

காந்தியத்திற்கும் கம்யூனிசத்துக் கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் குறித்துத் தமது உரையிலே விளக்கிக் கொண்டு வந்தார் கலைவாணர்.

கம்யூனிசம் ஜெட் வேகத்தில் செல்கிறது. எங்கள் காந்தியம் மாட்டு வண்டி வேகத்தில் செல கிறது' என்று குறிப்பிட்டார். இந்தக் கருத்தை கே. சுப்ரமணியம் ஆங் கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆனால் ருஷ்யர், தமது மொழியில் பெயர்க்கவில்லை. கம்யூனிசத்தைப் பற்றிக் கலைவாணர் ஏதோ குறை கூறுகிறார் என்று ருஷ்யர் நினைத் துக் கொண்டார். அதனால்தான் அவர் மொழி பெயர்க்கவில்லை. தனது கருத்து ருஷ்ய மொழியில் பெயர்க்கப்படவில்லை என்பதைக் கலைவாணர் புரிந்து கொண்டு விட்டார்.

'நான் சொல்லும் கருத்தெல லாம் ருஷ்ய மொழியில் பெயர்த்துச் சொல்லப்பட்டால்தான் நான் மேற் கொண்டு பேசுவேன். இல்லை யென்றால் உரையாற்ற மாட்டேன்' என்று தெரிவித்து விட்டு இருக்கை யில் அமர்ந்துவிட்டார் கலைவாணர். ஒரு வகையில் அன்று, அவர், அங்கே அறப்போரையே நிகழ்த்தி விட்டார். பின்னர் அந்த ருஷ்யர் வேறு வழியின்றி, கலைவாணர் சொல்லிய அந்தக் கருத்தை மொழி பெயர்த்துக் கூறினார்.

ருஷ்ய நாட்டுக்குச் சென்று காந்தியத்தை வலியுறுத்தியது மட்டு மல்லாமல், காந்திய நெறியில் அறப் போரையும் செய்தார் கலைவாணர். இறுதி வரை அவர் அண்ணலின் தொண்டராகவே திகழ்ந்தார்; கடைசி மூச்சு உள்ளவரை காந்தி யத்தை மறவாதவராக வாழ்ந்தார்.

# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்".

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY
MADRAS FERTILIZERS

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

HTA 8249

# உழைப்பே உயர்வு!







கவிஞர் அ. மறைமலையான்

விதைக்காமல் கதிர்மணிகள் விளைவ தில்லை;
வேர்க்காமல் உலைக்களத்தில் கருவி இல்லை;
செதுக்காமல் கருங்கல்லை சிலைகள் இல்லை;
தேம்பாமல் குழந்தைக்குப் பாலும் இல்லை;
உதைக்காமல் உந்துவண்டி ஓட்டம் இல்லை;
உருகாமல் மெழுகுவத்தி ஒளியும் இல்லை;
மிதிக்காத களிமண்ணால் பாண்டம் இல்லை;
மிகச்சிறிய பலன்பெறவும் உழைப்பே மூச்சு!

உறங்கிவிட்ட வீணையினால் இசைதான் ஏது?
உருளாத சக்கரத்தால் பயணம் உண்டோ?
வருங்காலம் நிகழ்காலம் எல்லாம் ஏது
வையம்எனும் பூப்பந்தே சுழலா விட்டால்?
நெருங்கிவரும் வாய்ப்பெல்லாம் விலகும் அன்றோ
நீள்துயிலில் உழைக்காத மனிதன் கண்டே!
பெருங்கவலை பேரச்சம் சூழும்; இந்தப்
பிறப்புக்கே சிறப்பேது உழைக்கா விட்டால்?







## 64 ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்புத்தொழிற் பயிற்சி

இந்து ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை நல்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், அம்பத்தூர் மற்றும் மதுரையிலுள்ள 2 தொழிற்பயிற்சி நிலையங்களில் தலா 32 மாணவர் வீதம் 64 ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்புத் தொழில் பயிற்சி (Plastic Processing Operator Trade) என்ற புதிய பயிற்சியை அளித்திட ரூ.18,12,000 மானியமாக வழங்கிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## உங்களுக்குத் தெரியுமா?

- உலக மக்கட்தொகை ஆண்டுக்கு 92 மில்லியன் வீதம் அதிகரித்து வருகிறது.
- உலகில் ஆண்டுதோறும் சுமார் 17 மில்லியன் எக்டேர் பரப்பளவுள்ள வனங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.
- பூமிக்கு மேலே வாயு மண்டலத்தைச் சுற்றியுள்ள ஓசோன் அடுக்கு (Ozone layer) விஞ்ஞானிகள் சில ஆண்டுகளுக்கு முன்பு நினைத்ததைக் காட்டிலும் மிக விரைவாக இரு மடங்கு அளவில் சுருங்கிக் கொண்டு வருகிறது.

## புதிய ஒலிபரப்பு

நாட்டிலுள்ள அனைத்து வர்த்தக ஒலிபரப்பு நிலையங்களிலிருந்தும் ''அப்னே அதிகார்'' என்ற நிகழ்ச்சி ஜூலை மாதம் ஐந்தாம் தேதியிலிருந்து ஒலிபரப்பப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் வர்த்தக ஒலிபரப்பில் பகல் 12.20 மணிக்கு ஒலிபரப்பப்படும். நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கும்போது சந்தையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் மக்களுக்கு அறிவுறுத்துவதாகும். கணவன் மற்றும் மனைவி கதாபாத்திரங்களின் உரையாடல் வாயிலாக, நுகர்வோரின் பிரச்சினைகளும் அவற்றைச் சரிசெய்யும் வழிகளும் இந்த நிகழ்ச்சியில் சொல்லப்படும்.

## நீர்

நீரின் உபயோகத்தைச் சொல்லத் தேவையில்லை. வீட்டு உபயோகத்திற்கும், இதரத் தேவைகளுக்கும் இப்போது பயன்படும் நீரின் அளவு ஆண்டொன்றுக்கு 25 பில்லியன் கன மீட்டர் ஆகும்.

2025-ஆம் ஆண்டில் 40 பில்லியன் கன மீட்டர் நீர் தேவைப்படும். நகரங்கள், தொழிற் பேட்டைகள், வறட்சிப் பிரதேசங்கள் எனக்குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் நீரின் தேவை அதிகமாக இருப்பது கவலை தரும் விஷயமே.

அதிகரிக்கும் மக்கள் தொகைக்கு ஏற்ப, 2050-இல் 450 மில்லியன் டன் உணவு தானியங்கள் விளைவிக்கப்பட வேண்டும். இதற்கேற்ப பாசன வசதியும் அதிகரிக்கும். எனவே, வருங்காலம் வளம்பெற நீரைச் சிக்கனமாகச் செலவழிப்போம்!

## நாணயம்

'நாணய'த்துக்குள்ள மதிப்பே தனிதானே! ஒரு ரூபாய் நாணயங்களைத் தயாரிப்பதற்காக 1,455 மெட்ரிக் டன் எவர்சில்வரை அரசின் நாணயச்சாலைக்கு வழங்கும் ஆர்டர், பலத்த சர்வதேசப் போட்டிகளுக்கிடையே நமது சேலம் எஃகு ஆலைக்குக் கிடைத்திருக்கிறது.

வட்ட வடிவில், நாணய உருவில் இது முத்திரை பதிப்பதற்காக நாணயச்சாலைக்குப் போய்ச் சேரும். ஏற்கெனவே 25 காசு, 50 காசு நாணயங்களுக்காக 3,300 மெட்ரிக் டன் எவர் சில்வரை சேலம் ஆலை வழங்கியிருக்கிறது. இதனிடையே, உலக அளவிலான தர நிர்ணய அளவுகோலான ISO 9000-ஐப் பெறும் தகுதியைச் சேலம் எஃகு ஆலையின் தயாரிப்புகள் எட்டி விட்டன!

# துணுக்குகள்

## பெரியார் மாவட்டத்தில்:

# வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்திற்குட்பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1992-93-ஆம் ஆண்டிற்கு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 10,830 நபர்களுக்கு ரூ.270.750 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. இதில் நாளது வரை 718 நபர்களுக்கு ரூ.13.38 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. நாளதுவரையில் 45 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டிற்கான டிரைசம் பயிற்சியாளர்கள் 1,400 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு, 10.6.91 மற்றும் 1.9.91 முதல் பயிற்சி தொடங்கப்பட்டது. இது வரை 686 நபர்கள் பயிற்சி முடித்துள்ளனர். மீதி நபர்கள் 31.8.92-இல் தங்களது பயிற்சியை முடிப்பார்கள். பயிற்சி முடித்த 686 நபர்களில் 176 நபர்கள் சுயவேலை வாய்ப்பும், 510 நபர்கள் ஊதிய அடிப்படையிலும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் 96 நபர்களுக்குத் தாங்கள் பெற்ற பயிற்சியில் தொழில் புரிய மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜூன் திங்களில், இருதய அறுவைச் சிகிச்சை இனங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.41 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு இருபது அம்சத் திட்டத்தினை, பெரியார் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக, தமிழக அரசு பெரியார் மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ரூ.4 இலட்சம் வழங்கி உள்ளது. இத்தொகையினைக் கொண்டு 10 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1992-93-ஆம் ஆண்டிற்கு, வறட்சி நிவாரணத் திட்டப்பணிகளுக்காக, ரூ.32 இலட்சம் ஒதுக்கீட்டில் கன்னிவாடி பேரூராட்சி, மொங்கநல்லாம்பாளையம், சென்னிமலை பேரூராட்சி ஒட்டன்குட்டை, அந்தியூர் வட்டாரம் காக்காயனூர், பெருந்துறை வட்டாரம் ராக்கியாபாளையம், காங்கயம் வட்டாரம் செம்மாங்குழிபாளையம், தாராபுரம் நகராட்சி, ஈரோடு வட்டாரம் ஈரோடு ஜவுளிநகர், வெள்ளக் கோவில் பேரூராட்சி புதுப்பை, மூலனூர் பேரூராட்சி ரசினாம்பாளையம், தாராபுரம் வட்டாரம் தளவாய்ப்பட்டினம், சத்தி வட்டாரம் திக்கரை, ஈரோடு வட்டாரம் மூலப்பாளையம், தாராபுரம் வட்டாரம் சுண்ணாம்புக்காடு ஆகிய இடங்களில் திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும்பணி தொடங்கப்பட்டு, தாராபுரம், ஈரோடு ஜவுளி நகர் ஆகிய இரண்டு இடங்களில் கிணறுகள் முடிவு பெற்று உள்ளன.

ரூ.10.48 இலட்சம் ஒதுக்கீட்டில் குழாய் நீட்டிப்பின் மூலம் குடிநீர் வழங்கும் பணிகள் 5 இடங்களில் தொடங்கப்பட்டு, மூலனூர் மற்றும் வெள்ளக்கோவில் பேரூராட்சிகளில் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.6 இலட்சம் செலவில் 303 ஆழ்குழாய்க் கிணறுகளில் தூர் நீக்கம் செய்யப்பட்டு, குடிநீர் வழங்கும் பணி சீரமைக்கப்பட்டு உள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.33.75 இலட்சம் ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட 75 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 1992-ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 9,206 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது.

பெரியார் மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் இல்லாத 2,857 குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் மே மற்றும் ஜூன் மாதங்களில் 3,349 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ளன.

கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், பிற்பட்ட மாணவ, மாணவியர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைரூ.4,92,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.3,24,268 மதிப்பீட்டிற்குப் பாடப்புத்தகங்கள் வழங்கிச் செலவு செய்யப்பட்டு, 8,600 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.7,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மிகப் பிற்பட்ட வகுப்பினருக்குப்



பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.2,68,000 ஒதுக் கீடு செய்யப்பட்டு, ரூ.1,74,490 மதிப்பில் பாடப்புத்தகங்கள் வழங்கிச் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 4,615 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.5,75,000 ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டத் தின்கீழ் 8,50,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மிகப் பிற்பட்டோர் இனத்த வர்களுக்கு நிலம் கையகம் செய்து வீட்டுமனை வழங்க ரூ.6.50 இலட் சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை ரூ.3,91,195 செலவிடப் பட்டு, 175 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிட நலத் துறையின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 351 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. இதற்கு ரூ.67,817 செலவு செய்யப்பட்டுள்ளது.

152 அரசுப் பள்ளிகளில், 9 மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மாண மாணவி களுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறையால் ஆதிதிராவிட இளைஞர் களுக்கு இராணுவம் மற்றும் காவல் துறையில் சேருவதற்கு முன்பயிற்சி அளிக்க ரூ.1.40 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இப்பயிற்சிக்கு 86 தகுதி வாய்ந்த ஆதிதிராவிட இளை ஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 15 நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்குச் சிலேட்டுகளும், பாடப்புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட நலத்துறையின் கீழுள்ள பர்கூர், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளியாக 1992-93 கல்வியாண்டு முதல் உயர்த்தப் பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் நடப் பாண்டில் வேளாண் துறையின் கீழ் ரூபாய் ஒரு கோடி செலவில் பல் வேறு வகையான மானிய உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள் ளன. தரமான நெல் விதைகள் வாங் கிட ரகத்திற்கேற்ப கிலோவுக்கு ரூபாய் ஒன்று முதல் ரூ.2 வரையும், பயிர்ப்பாதுகப்புக் கருவிகள் மற்றும் வேளாண் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும் விவசாயி களுக்கு 'ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூ.19.8 இலட்சம் செலவில் வழங்கப்படு கிறது. இத்திட்டத்தின் கீழ் விதைகள் வாங்கிட கிலோவுக்கு ரூ.4 வீதமும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும், வேளாண் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும் வழங்கப்படு கிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க ரூ.42.7 இலட்சம் செலவில் பல்வேறு மானிய உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப் படுகின்றன

---

## டால்பின்

**சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டி னால் ஒன்றும் அறியாத பிராணிகள் கொல்லப்படும் சோகக் கதையைக் கேளுங்கள். கங்கை நதி அசுத்த மடைவதால் அதில் வாழுகின்ற டால்பின்கள் இறந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

**கங்கையைத் தூய்மைப்படுத்தும் முயற்சிகள் ஒருபுறமிருக்க, இந்த டால்பின்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவற்றை 'அழிந்து வரும் உயிரின வகை'யாக அறிவித்ததுடன், பீகாரில் கங்கை யிலேயே 'விக்ரமஷிலா டால்பின் சரணாலய'த்தை அரசு ஏற்படுத்தி யுள்ளது.**

---

தரமான எண்ணெய் வித்து விதைகளை விவசாயிகளிடமிருந்து வாங்கி அரசு வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் மானிய உதவி யுடன் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு இதுவரை 245 டன் நிலக்கடலை விதைகளும், 6 டன் எள் விதைகளும், 4 டன் இதர விதைகளும் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன. இப்பணி தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

படித்து வேலையற்ற இளைஞர் களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக மே 1992 மாதம் முடிய மொத்தம் 306 நபர் களுக்கு ரூ.75.55 இலட்சம் பட்டு வாடா செய்யப்பட்டது. இதில் 6 ஆதிதிராவிடர்களுக்காக ரூ.1.10 இலட்சம் அடங்கும். இத்திட்டத் தின்கீழ், 1992-93-ஆம் ஆண்டிற் குக் குறியீடு இன்னும் நிர்ணயிக்கப் படவில்லை.

இத்திட்டத்தின் கீழ், பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு பெற்ற 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டு உள்ள ஆண் பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.10 ஆயிரத்திற்கு மிகாமல் இருந்தால், சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்பு உள்ளது.

நடப்பாண்டில் 8 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 127769.700 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டு 1200 ஏக்கர் அளவில் மல்பரிப் பயிர் இறவை சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 376.95 ஏக்கர்களில் மல்பரி இறவையின் கீழ் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண் டிற்கு 24 இலட்சம் மல்பரி நாற் றுக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 24 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

நடப்பாண்டில் 360 பயன் தாரர்களுக்கு மல்பரிப் பயிர்க் கடனும், 720 பயன்தாரர்களுக்கு ரூ.61,40,500 பட்டுப்புழு வளர்ப் புத் தளவாடங்களுக்கான கடனும், 400 பயன்தாரர்களுக்குப் புழு வளர்ப்பு மனை அமைக்கக் கடனும், புதிய கிணறு அமைக்க 3 பேருக்கும், கிணறு ஆழப்படுத்த 12 பேருக்கும், 15 தனியார் நூற்பகங்களுக்கும் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 1992 முதல் ஜூன் 1992 முடிய 436 நபர்களுக்கு, குடும்ப நிவாரண நிதியாக ரூ.13,08,000 வழங்கப்பட்டு உள்ளது. விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 3 நபர்களுக்கு ரூ.20,000-மும், 32 நபர்களுக்குச் சாலை விபத்து நிவாரண நிதியாக ரூ.48,000-மும் மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப் பட்டுள்ளது.

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
# நடத்தும் கவிதைப் போட்டி

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் புரட்சித் தலைவி - மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான பள்ளிக் கல்லூரிகளில் பயிலும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் கவிதைப்போட்டியை நடத்தி,சிறந்த கவிஞர்களுக்குப் பரிசுகள் வழங்க முடிவு செய்துள்ளது. தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளி வரையில் உள்ள மாணவ-மாணவிகளுக்கு ஒரு போட்டியும், 17 வயது முதல் 25 வயது வரையிலான கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு ஒரு போட்டியும் நடத்த மன்றம் திட்டமிட்டுள்ளது.

கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள இளம் கவிஞர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கவிதையினை எழுதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும்:-

1. கவிதை, தங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமைக்கலாம்.

2. கவிதை, இருபது வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று தலைப்புகளுக்குள் ஏதாவது ஒரு தலைப்பில் கவிதை எழுதலாம்:-

**பள்ளி மாணவ-மாணவிகளுக்கு:**

அ. எங்கள் கையில் எதிர்காலம்.
ஆ. காலம் கனியும்.
இ. நேயம் வளர்ப்போம் நெஞ்சம் நிறைவோம்.

**கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு:**

அ. கனவுகள் கரை ஏறும்.
ஆ. சிறகுகள் விரிப்போம் சிந்தனை வளர்ப்போம்.
இ. சேறும் சோறும்.

4. ஒருவர் ஒரு தலைப்பின்கீழ் மட்டுமே கவிதை எழுதுதல் வேண்டும்.

5. கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கவிஞர்கள் கவிதையினை இணைத்து கீழ்க்கண்ட விவரங்களைப் படிவம் போன்று பூர்த்தி செய்து, 'உறுப்பினர்-செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'பொன்னி', 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை-600 028' என்ற முகவரிக்கு 24.8.1992 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அ. கவிஞர் பெயர் -
ஆ. வயது -
இ. தந்தை பெயர் -
ஈ. வீட்டு முகவரி -
உ. பள்ளி/கல்லூரி பெயர் -
ஊ. படிக்கும் வகுப்பு -

**உறுதிமொழி**

இத்துடன் அனுப்பியுள்ள ' ' என்ற தலைப்புள்ள கவிதை என் சொந்தக் கற்பனையே. இது தழுவலோ அல்லது மொழிபெயர்ப்போ அன்று என்று உறுதியளிக்கிறேன்' என எழுதிக் கையொப்பமிட்டுக் கவிதையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

பரிசீலனைக்குப் பிறகு தகுதியுள்ள கவிஞர்கள் கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள அழைக்கப் படுவார்கள்.

தேர்வு செய்யப்படும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ- மாணவிகளுக்குத் தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

முதல் பரிசு - ரூ.1,000 வீதம் 2 பரிசுகள்.
இரண்டாம் பரிசு - ரூ.500 வீதம் 2 பரிசுகள்.
மூன்றாம் பரிசு - ரூ.300 வீதம் 2 பரிசுகள்.
ஆறுதல் பரிசுகள் - ரூ.100 வீதம் 4 பரிசுகள்.

**1992 செப்டம்பர் 11-ஆம் தேதியன்று சென்னை, மயிலாப்பூர்** பாரதிய **வித்யா பவனில்** நடைபெறும் 'இயல் விழாவில்' பரிசுகள் வழங்கப்படும்.

இக்கவிதைப் போட்டி தொடர்பான அனைத்து விளக்கங்களிலும் மன்ற உறுப்பினர்-செயலாளர் அவர்களின் தீர்ப்பே இறுதியானது.



# அரசு ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள்!

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசு அலுவலக சங்கங்களுடன் 1.8.92 அன்று தலைமைச் செயலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார். அலுவலக சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட முடிவுகளை அறிவித்தார்.

23.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகச் சட்டப் பேரவையில் அமைச்சுப் பணியாளர்களின் கோரிக்கைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளை அறிவித்திருந்தார். அதன்படி கீழ்க்கண்ட பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது.

தற்போது பல துறைகளின் ஒரு உதவியாளருக்குக் கீழ் 3 அல்லது 4 இளநிலை உதவியாளர்கள் இருக்கிறார்கள். இதனை மாற்றி ஒரே சீராக அனைத்துத் துறைகளிலும் 2 உதவியாளர்களுக்கு ஒரு இளநிலை உதவியாளர் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 11,854 இளநிலை உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

அதேபோல், பல துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் 10 அல்லது 15 உதவியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலை இருந்து வருகின்றது. இதனை ஒரே சீராக மாற்றி, அனைத்துத் துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் 5 உதவியாளர்கள் அல்லது 5 இளநிலை உதவியாளர்கள் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 2,050 உதவியாளர்களுக்குக் கண்காணிப்பாளர் பதவி உயர்வு கிடைக்கும்.

அலுவலக மேலாளர் (Office Manager) ரூ.1820-3200 என்ற ஊதிய விகிதத்தில் தற்போது 250 பணியிடங்கள் இருக்கின்றன. இந்த ஊதிய விகிதத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இக்கோரிக்கையினை ஏற்று இவர்களுக்கு ரூ.2000-3200 என்ற ஊதிய விகிதத்தை வழங்க இந்த அரசு தீர்மானித்துள்ளது.

பல துறைகளில் அமைச்சுப் பணியாளர்கள் மேலாளர் பதவிக்கு மேல் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது. இவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் அனைத்துத் துறைகளிலும் அந்தந்தத் துறைகளில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உயர் பதவிகள் தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



| அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | தோற்றுவிக்கப்படவிருக்கும் புதிய பணியிடம் |
|---|---|
| 100-க்குக் கீழே | ஒரு அலுவலக மேலாளர் |
| 100-க்குக் மேல் | ஒரு உதவி |
| 500-க்குக் கீழ் | இயக்குநர் |
| 500-க்கு மேல் | |
| 2500-க்குக் கீழ் | ஒரு துணை இயக்குநர் |
| 2500-க்கு மேல் | ஒரு இணை இயக்குநர் |

இந்தப் புதிய பணியிடங்களுக்கு அமைச்சுப் பணியாளர்களே பணியமர்த்தப்படுவார்கள்.

இந்தப் பதவி உயர்வு அளிக்கும் திட்டத்திற் கான ஆணை (1.8.1992) வெளியிடப்படும். இத் திட்டத்தின் வாயிலாக 14,000 அமைச்சுப் பணி யாளர்கள் பயன் அடைவார்கள். ஏற்கெனவே இந்தத் திட்டம் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனை மாற்றி நடப்பாண்டில் உடனடியாக 50 சதவிகிதமும், அடுத்த நிதியாண்டில் அதாவது 1993-94-இல் ஜூலை 1993-க்குள் மீதமுள்ள 50 சதவிகிதமும் செயல்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக் கப்படும். இதனை விரைவாகச் செயல்படுத்து வதன் வாயிலாக அமைச்சுப் பணியாளர்களுக்கு உடனடியாகப் பலன் கிடைக்க வழிவகை செய்யப் பட்டுள்ளது.

அலுவலர் குழுவின் பரிந்துரைகளின்படி ஐந்தாவது ஊதியக்குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டு 214 பணியாளர் பிரிவுகளின் கோரிக் கைகளை ஏற்றுக்கொண்டு புதிய ஊதிய விகிதங் களுக்கான ஆணைகள் இன்று பிறப்பிக்கப்படும். இந்த ஊதிய விகிதங்களில் உள்ள மாற்றங்கள் 1.6.1988-இல் இருந்து அதாவது ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தி நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு பணப் பயன் 1.4.1992 முதல் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும். புதிய ஊதிய விகிதம் கிடைக்கக் கூடிய 214 பிரிவினர்களில் பல தொழில்நுட்பப் பிரிவினர்களும் அடங்குவார்கள்.

கடுமையான நிதிநிலையின் காரணத்தினால் புதிய அகவிலைப்படி விகிதங்களை இந்த அரசு வழங்கும்பொழுது 4 மாதங்களுக்கான அதாவது 1.1.92-இல் இருந்து 30.4.92 வரை உள்ள நிலுவை அகவிலைப்படித் தொகையை மட்டும் அரசு அலுவலர்களின் சேம நல நிதியில் கணக்கு வைக்கப்பட்டு இந்தத் தொகை 12 சதவிகித வட்டியுடன் அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் என்று ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று இதில் சில மாற்றத்தைக் கொண்டு வரத்தீர்மானிக்கப்பட்டுள் ளது. இதன்படி ஓய்வுபெறும் கட்டத்தில் இந்த நிலுவைத் தொகையைத் திரும்ப அளிப்பது என்ற நிபந்தனை கைவிடப்பட்டு இந்த நிலுவைத்தொகை ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின்படி அரசு அலுவலர்களுக்குச் சேமநல நிதியிலிருந்து வழங்கப் படும் முன் பணங்களுக்குக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தற்போது செல வீட்டுப்படிகள் (Out of pocket expenses) சென்னை யில் நாள் ஒன்றுக்கு ரூ.4 என்ற விகிதத்திலும் மாவட்டங்களில் நாள் ஒன்றுக்கு ரூ.3 என்ற விகிதத்திலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனை ஒரே சீராக மாற்றி நாள் ஒன்றுக்கு ரூ.10 என்று உயர்த்தப்பட்டு 1.8.92-இல் இருந்து வழங்கப் படும்.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றக்கூடிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு ஆண்டுதோறும் 2 இணைச் சீருடைகள் வழங்கப்படுகின்றது. இதனை மாற்றி நடப்பாண்டிலிருந்து 4 இணைச் சீருடைகள் வழங்கப்படும். இதரத் துறைகளில் பணியாற்றக் கூடிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு 3 இணைச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை மாற்றி ஆண்டுதோறும் 3 இணைச் சீருடைகள் வழங்கப்படும். இந்தச் சீருடைகள் அனைத்தும் கைத்தறி மற்றும் காதி பாலியஸ்டராக வழங்கப்படும்.

அரசு ஊர்தி ஓட்டுநர் சங்கத்தின் கோரிக் கையை ஏற்று அவர்களுடைய சங்கக் கட்டடத்திற்கு ரூ.2.5 இலட்சம் நன்கொடையாக வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த ஆண்டு முதல் இவ்வரசு, மாசற்ற பணிபுரியும் அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்குப் பரிசு வழங்கும் புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த



முடிவு செய்துள்ளது. இதன்படி பரிசுத்தொகை ஊர்தி ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.500 என்ற அளவில் சிறு சேமிப்புச் சான்றிதழாக வழங்கப் படும். இத்திட்டத்தின்படி குறைந்தது 10 ஆண்டுகள் பணி முடித்து விபத்து இல்லாமல் சிறப்பாகப் பணிபுரிந்த அரசு ஊர்தி ஓட்டுநர்கள் இந்தப் பரிசுக்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். அதேபோல 20 ஆண்டுகள் பணிமுடித்து, விபத்து இல்லாமல் சிறப்பாகப் பணிபுரிந்த அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

அலுவலக உதவியாளர்களின் கோரிக்கையை ஏற்று தற்போது இளநிலை உதவியாளர் பதவிக்கு அலுவலக உதவியாளர்களுக்கு 10 சதவிகிதம் என்ற ஒதுக்கீட்டை 20 சதவிகிதமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்படும்.

தலைமைச் செயலகம் மற்றும் இதரத் துறை களில் பணியாற்றக்கூடிய சுருக்கெழுத்து தட்டச்சர் களுக்குப் பணி விதிமுறைகளில் மாற்றம் செய்து மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் உடனடியாக வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்குப் பண்டிகை முன்பணம் இதுவரை வழங்கப்பட்டு வருகிற ரூ.500-லிருந்து ரூ.750-ஆக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 கோடி செலவாகும்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி உயர்வு பற்றி, சங்கப் பிரதிநிதிகளின் கோரிக் கையைப் பரிசீலனை செய்து, 1993-94-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது அறிவிக்கப்படும்.

## மின்மயம்!

இந்திய இரயில்வேயில், முதன் முதலாக மின்மயம் தொடங்கப்பட்டது 1925-இல். பம்பாயி லுள்ள விக்டோரியா டெர்மினலுக்கும், குர்லா துறைமுகத்திற்கும் இடையில் முதல் மின்சார இரயில் ஓடியது. இது 1930-இல் கல்யாண் ரயில் நிலையம் வரை விரிவாக்கப்பட்டது.

சென்னை புறநகர்ப் பிரிவு மின்மயம் 1929-இல் செய்யப்பட்டது. பத்து ஆண்டிற்குள் மொத்தம் 388 கிலோ மீட்டர் தூரம் மின்மயமாக்கப் பட்டது.

பெருநகரங்களான தில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னைக்கிடையேயும் வேறு சில முக்கிய தடங் களிலும் மின்மயமாக்கும் பணி தொடர்ந்தது. அத்தியாவசியப் பொருட்களான உணவு தானி யங்கள், சிமெண்ட், உரம், நிலக்கரி, இரும்புத் தாது ஆகியவற்றை விரைந்து எடுத்துச் செல்ல மின் ரயில் உதவியது.

தற்போது, 1991-92-இல் தில்லி-சென்னை, தில்லி -பம்பாய், கல்கத்தா-பம்பாய் (நாக்பூர் வழி) ஆகிய மூன்று முக்கியத் தடங்கள் முழுது மாக மின்மயமாக்கப்பட்டன.

மேற்கண்ட முடிவுகளை அரசு அறிவித்திருப்ப தால், வேலைநிறுத்தம் பற்றிய அறிவிப்பினை, அலுவலர் சங்கப் பிரதிநிதிகள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1.8.92 அன்று அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கை சம்பந்தமாக, சங்கப் பிரதிநிதிகளுடன் கோட்டை யில் பேச்சு வார்த்தை நடத்தி சில முடிவுகளை அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக அரசு அலுவலர் சங்கங்கள் அமைச்சுப் பணியாளர் களுக்கு மேலும் சில பயன்கள் தரும் வகையில் தங்களுடைய கோரிக்கைகளை ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர் களை மீண்டும் கேட்டுக் கொண்டனர்.

அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4.8.92 அன்று அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதி களை அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கத்திரும் பவும் தனது இல்லத்திற்கு அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவற்றை அறிவித்தார்.

*(1)* அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அவர் தம் நிலையில் உள்ளவர்கள் சம்பந்தமான கோரிக் கைகளைப் பொறுத்தவரை ஊதிய விகிதங்களை மறுபடியும் மாற்றி அமைப்பதில் பல்வேறு சிக்க லான புதிய பிரச்சினைகள் உருவாகக் கூடிய சூழ்நிலையில் இதனைக் கைவிடுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. எனவே, அடுத்த ஊதியக்குழு ஏற் படுத்தும் வரை ஊதிய விகிதங்களைப் பற்றி மறு பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது.

*(2)* அதே நேரத்தில் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் நிலையில் உள்ளவர்களின் மனம் தளராமல் அவர்களை உற்சாகப்படுத்திப் பணி யாற்றும் வகையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன.

5 சதவிகித தனி ஊதியம் (Perso nal Pay) பழைய ஊதிய விகிதம் ரூ.475-775-லிருந்து ரூ.775-1025 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள பதிவுறு எழுத்தர்கள் போன்றவர் களுக்கும், பழைய ஊதிய விகிதம் ரூ.610-1075-லிருந்து ரூ.950-1500 என்ற ஊதிய விகிதத் திற்குச் சென்றவர்களுக்கும் ரூ.975-1660 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் போன்ற அலுவலர்களுக் கும், பழைய ஊதிய விகிதம் ரூ.705-1230-லிருந்து ரூ.1200-2040 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள உதவியாளர் போன்ற பிரிவினர்களுக்கும் பழைய ஊதிய விகிதம் ரூ.905-1545-லிருந்து புதிய ஊதிய விகிதம்

## கடற் செல்வம்

'திரைகடலோடித் திரவியம் தேடு' என்பது பழமொழி. திரைகடலுக்குள் திரவியம் தேடு என்பது புதுமொழி. நம் நாட்டின் முப்புறமும் சூழ்ந்துள்ள கடலின் மடியிலிருந்து பிடிக்கப்பட்ட மீன் வகையறாக்களின் மூலம் 1991-92-இல் நமக்கு 578 மில்லியன் அமெரிக்க டாலர் கிடைத் துள்ளது (ரூ.1,424 கோடி). 1988-89-இல் இத்துறையின் ஏற்றுமதி மதிப்பு ரூ.597.85 கோடி அளவிலேயே இருந்தது. (412.88 மில்லியன் அமெரிக்க டாலர்).

இறால் மீனுக்கே அதிக வரவேற்பு; இத்துறையின் ஏற்றுமதியில் 45 சதவிகித மதிப்பில், 74 சதவிகிதத்தையும் இறால் மீனே தட்டிச் செல்கிறது. ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளே பெருமளவில் இறக்குமதி செய்கின்றன.

இத்துறை மேலும் வளர்ச்சி பெற, ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு அரசு ஊக்கம் அளித்து வருகின்றது. கடல்வள ஏற்றுமதி வளர்ச்சி ஆணையகத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.14.25 கோடி ஒதுக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## கைவினைப் பொருட்கள்

எளிய கருவிகளால் நமது பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கலை உணர்வுடன் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்கள் வெளி நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன. இந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் நமக்குக் கணிசமான அந்நியச் செலாவணி கிடைத்து வருகின்றது.

1990-91-ஆம் ஆண்டில் கைவினைப் பொருள் ஏற்றுமதி மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி ரூ.1,220 கோடியாகும். இது 21 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகின்றது. சென்ற நிதியாண்டில் ரூ.1,810 கோடி கிடைத்தது. இது 48.5 சதவிகித வளர்ச்சியாகும். நடப்பு ஆண்டில் ரூ.2,076 கோடி அந்நியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- நன்றி 'தூவானம்'.

---

ரூ.1600- 2660-க்குச் சென்றுள்ள கண்காணிப்பாளர்களுக்கும் வழங்கப்படும். இந்தச் சலுகை ஆகஸ்ட் 1992 முதல் அமலுக்கு வரும்.

மேற்கண்ட பதவிகளில் உள்ளவர்களுக்கும், அதனை ஒட்டியுள்ள தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் உள்ளவர்களுக்கும் இந்தத் தனி ஊதியம் பொருந்தும். மேலும் மேற்கண்ட பதவிகளுக்குள் பதவி உயர்வு கிட்டும் கட்டத்திலும் இந்தத் தனி ஊதியம் தொடரும்.

(3) தற்போது தேர்வு நிலைத் தகுதிக்குச் செல்வதற்குத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

இதனை அடுத்து, அரசு அலுவலர் சங்கங்கள் மேலும் ஊதிய விகிதங்களைப் பற்றி அடுத்த ஊதியக் குழு அமைக்கப்படும் வரை பிரச்சினைகளை எழுப்புவது இல்லை என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் உள்ள தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து 5.8.92 அன்று நடைபெற இருந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் போராட்டம் கைவிடப்பட்டது என்று அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகள் அறிவித்தார்கள். மேலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இப்பிரச்சினையைச் சுமுகமான முறையில் முடித்து வைத்ததற்குத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இன்று நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையின்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நிதிச் செயலாளர் திரு. என். நாராயணன் மற்றும் முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன் ஆகியோர்களும் கலந்து கொண்டார்கள்.

இன்று நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையில் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி அண்டு டி) பிரிவின் தலைவர் திரு. கே.ஜி. மோகன், செயலாளர் திரு. என். சங்கரன், தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஒன்றியத்தின் தலைவர் திரு. சிவ. இளங்கோ, செயலாளர் திரு. நெல்லை மணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. பாலசுப்ரமணியன், செயலாளர் திரு. பி.எஸ். சௌந்தரபாண்டியன், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. கங்காதரன், செயலாளர் திரு. எம்.ஆர். அப்பன் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தின் (சி அண்டு டி) தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் மற்றும் இதர சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.



# மாவீரன் பகத்சிங்

— ரகமி

நம் நாடு ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை அடைய, ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடிய வீரர்களுள் வட நாட்டில் அஞ்சா நெஞ்சனாகத் திகழ்ந்தவன் தான் பகத்சிங்! இவனது பெயரை அறியாத இந்தியரே இல்லை எனலாம்.

நம் தமிழ்நாட்டில் 1911 ஜூன் 17-இல் மணியாச்சி ரயில்வே ஜங்க்ஷனில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷை, செங்கோட்டை வாஞ்சி என்ற இளைஞன், தன்னிடமிருந்த பிஸ்டலினால் சுட்டுக் கொன்று, அடுத்த சில நிமிடங்களில் அதே பிஸ்டலினால் தன்னையும் சுட்டுக் கொண்டு வீரமரணம் அடைந்தான்.

தென்னாட்டில் நிகழ்ந்த இச்சம்பவம் அடுத்து 18 ஆண்டுகள் கழித்து வட நாட்டில் 1929-இல் பஞ்சாப் வீரன் எனப் புகழப்படும் வீர இளைஞன் பகத்சிங்கின் துணிச்சலான குண்டு வீச்சுச் சம்பவம் மிக முக்கியமானதாகும்.

தற்போது பாகிஸ்தானைச் சேர்ந்த ஃபைஸலாபாத் என வழங்கும் 'லியால்பூர்' முன்பு பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்திருந்தது. (ஃபைஸலாபாத் தான் கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகள் நடக்குமிடம்.) லியால்பூரில் சுதேசியம், தேசபக்தி, சுதந்திர உணர்ச்சி இம்மூன்றும் நிறைந்த சர்தார் அர்ஜூன் சிங் பரம்பரையைச் சேர்ந்த சர்தார் கிஸன் சிங்கிற்கு 1907 செப்டம்பர் 28-ல் பகத்சிங் இரண்டாவது புதல்வராகப் பிறந்தான்.

பள்ளியில் சேர்க்கப்பட்ட பகத்சிங் படிப்போடு, எந்நேரமும் முரட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து, இதர மாணவர்களை வீண் வம்புகளுக்கு இழுத்தல், கலாட்டா, தெருச் சண்டைகளில் ஈடுபட்டான். மெட்ரிகுலேஷன் தேறிய பகத்சிங் கல்லூரியில் சேர்ந்ததும், அங்கு சுகதேவ், யஷ்பால் என்ற இரு நண்பர்கள் இவனிடம் நெருங்கிப் பழகினர். மாணவப் பருவத்திலிருந்தே இம் மூவரும் ஆங்கிலேய ஆட்சி ஒழிப்பு, நாட்டு விடுதலை போன்ற எண்ணங்களில் கவனம் செலுத்தினர். அதோடு அச்சமயம் கான்பூரில் நடந்த காங்கிரஸ் மகாசபை கூட்டத்திற்குச் சென்ற பகத்சிங், தலைவர்களின் பிரசங்கத்தினால் அவனது மனதில் சுதந்திர உணர்ச்சி மேலும் தீவிரமாகியது.

இச்சமயம் வடநாட்டில் பல இடங்களில் 'பப்பர் அகாலி சங்கம்' தோன்றி ஆங்கிலேய ஆட்சியை எதிர்க்கப் பல இளைஞர்களை ஊக்குவித்ததில், பகத்சிங்கும் இச்சங்கத்தில் சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டினான். தங்களது திட்டங்களை நிறைவேற்ற ஆங்கிலேயர்கள் மீது வெடிகுண்டுகளை வீச, குண்டுகளைத் தயாரிக்கப்பெரும்பணம் தேவைப்படவே, இக்கோஷ்டியைச் சேர்ந்த சில தீவிரவாதிகள் 1926-இல் 'காகோரி' என்ற ரயில்வே ஸ்டேஷனில் ரயிலை நிறுத்தி, அதில் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய சர்க்கார் கஜானா பெட்டிகளைக் கொள்ளை அடித்தனர். கொள்ளைக் கூட்டத்தாரை போலீஸ் பிடித்தபோது, பகத்சிங் அவர்களிடம் அகப்படாமல் தப்பிவிட்டான். பின்னர் 'காகோரி ரயில் கொள்ளை வழக்கில்' பகத்சிங்கின் நெருங்கிய நண்பர்கள் நால்வர் தூக்கிலிடப்பட்டதும், மனம் குமுறிய அவன் ஆட்சியாளர்களை எப்படியாவது பழி தீர்த்துக் கொள்வதில் முனைந்தான்.

பகத்சிங்கின் எண்ணத்தைத் துப்பறிந்த ரகசிய போலீஸ், பகத்சிங்கை கண்காணித்தது. 1926-இல் லாகூரில் ராம் லீலா வைபவத்தில் நடந்த வெடிகுண்டு வீச்சுக்குப் பகத்சிங்கும் காரணகர்த்தாவாகி இருக்கலாம் என வீணான காரணம் காட்டி அவனைக் கைது செய்தனர். இதனைக் கண்டு கொஞ்சமும் அஞ்சாத பகத்சிங் முறைப்படி ஜாமீனில் வெளி வந்து புரட்சி வேலையில் ஈடுபட்டான்.

1928-இல் நாளுக்கு நாள் நாடெங்கும் விடுதலைப் போராட்டம் பலமடைவதைக் கண்ட ஆங்கிலேயர்கள், மக்களை நேரிடையாகச் சந்தித்து அவர்களுக்குத் திருப்தியாக ஆட்சியை நடத்துவதைப் பற்றி ஆராய 'சைமன் கமிஷன்' என்ற பெயரில் ஒரு குழுவை அமைத்தது. இதில் பெரும்பாலும் வெள்ளையர்களே இருந்தார்களே தவிர, ஒரு இந்தியப் பிரதிநிதியுமில்லை. இதனால் இக்குழு எங்குச் சென்றாலும் பகிஷ்கரிப்பதென்று காங்கிரஸ் தலைவர்கள் தீர்மானித்து 'சைமன்! திரும்பிப் போ' (Simon go back) எனக் கூக்குரலிட்டனர். லாகூருக்கு வரும் சைமன் கமிஷனை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் நடத்த, லாலா லஜ்பத்ராய் மற்றும் சில தலைவர்கள் புறப்பட்டனர். ஊர்வலத்திற்குத் தடை விதித்ததோடு, அதனை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவித்தது.

தடையை மீறி லாலா லஜ்பத்ராய் ஊர்வலம் நடத்திய போது இந்தியர்கள் மீது வெறிகொண்ட லாகூர் பெரிய போலீஸ் அதிகாரி ஸ்காட் என்பவரும், இவருக்குத் துணையாக 'சண்டர்ஸீம்' கூட்டத்தைக் கலைக்கத் தடியடிப் பிரயோகம் செய்தபோது லாலா லஜ்பத்ராயைப் பலமாக தாக்கினார்கள். பலத்த காயங்களுடன் லாலாஜி நவம்பர் 17-இல் காலமானார். இதனால் பஞ்சாப் மக்கள் கொதித்தெழுந்து லாலாஜியை கடுமையாகத் தாக்கிய பெரிய போலீஸ் அதிகாரியான ஸ்காட்டை பதிலுக்குத் தீர்த்துக் கட்டுவதென்று முடிவெடுத்து இதனை நிறைவேற்றி வைக்கும் வேலை பகத்சிங், ராஜகுரு, சந்திரசேகர் ஆஸாத் ஆகிய மூவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சமயமும் நெருங்கியது. லாகூர் போலீஸ் நிலையத்திற்குள் ஸ்காட் வந்திருப்பதாக விஷயமறிந்த இம்மூவரும் போலீஸ் நிலையத்திற்கு அருகிலேயே ரிவால்வருடன் பதுங்கியிருந்தனர். திடீரென நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வெளிவந்த நபர் தூரப் பார்வைக்கு 'ஸ்காட்'டைப் போலிருக்கவே, ராஜகுரு தனது பிஸ்டலினால் அவரை குறிபார்த்துச் சுட்டான். பகத்சிங்கும் இரண்டு மூன்று முறைகள் சுடவே வந்த நபர் குண்டுகளுக்குப் பலியானார். ஆனால் பலியானது ஸ்காட் அல்ல! அவருக்குத் துணையாக இருந்த சாண்டர்ஸ்! இதனைக் கண்ட போலீசார்

சுட்ட கொலையாளியைத் தேடினர். போலீசில் சிக்காமல் இம்மூவரும் மாறு வேடத்தில் தப்பித்து விட்டனர்.

சுமார் நான்கு மாதங்களாகியும் போலீஸில் பகத்சிங் மற்றும் அவனது நண்பர்களைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. இருப்பினும் எல்லா இடங் களிலும் ரகசியப் போலீஸ் தீவிரமாயினர். 1929 ஏப்ரல் 8-இல் டில்லி சட்டமன்றம் கூடியது. அங்கு ஆங்கிலேய அதிகாரிகள் அமர்ந்திருந்த பக்கத்தில் திடீரென்று வெடிகுண்டுகள் வெடித்தன. குண்டுகள் வெடித்த இடம் பெரும் பள்ளமாகிய தோடு, அருகிலிருந்த மரச்சாமான்களும் தவிடுபொடியாயின. மண்டபம் முழு வதும் பயங்கரப் புகை மண்டலம். கூடி யிருந்த அனைவரும் அங்குமிங்கும் ஓடினர். போலீசும் குண்டு வெடித்ததின் காரணத்தை அறிய அங்கு மண்டபத்தைச் சுற்றி ரோந்து பார்த்ததில், அங்கு இளைஞர்கள் இருவரும் கைகளில் பிஸ்டல், வெடிகுண்டுகளுடன் காட்சி அளித்தனர். அவர்களில் ஒருவன் பகத் சிங்! மற்றொருவன் புத்தூகேஸ்வரதத்! இருவரும் தங்களிடமிருந்த பிஸ்டலையும், வெடிகுண்டுகளையும் அருகேயிருந்த மேசைமீது வைத்துவிட்டு 'புரட்சி ஓங்குக!', 'ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று கோஷமிட்டு அசையாமல் நின்றனர். உடனே போலீஸ் இருவரையும் கைது செய்து, அவர்கள் மீது குற்றங்களும் சாட்டினர்.

டில்லி கோர்ட்டில் நடந்த விசாரணை யில் பகத்சிங், கேஸ்வரதத் இருவருக்கும் ஆயுள் தண்டனை தீர்ப்பாகியது. சிறை யில் தன்போன்ற தீவிரவாதிகளை மிகக் கேவலமாக நடத்துவதைக் கண்ட பகத்சிங் சிறையிலேயே உண்ணாவிரதம் இருந் தார். தொடர்ந்து சுமார் ஒரு மாத காலம் தீவிர உண்ணாவிரதம் இருந்த பகத்சிங் கின் வேண்டுகோளை ஆட்சியாளர்கள் ஏற்று, சிறைக் கொடுமையைச் சற்று தளர்த்தினர்.

போலீஸ் அதிகாரி 'சாண்டர்ஸ் கொலை', டில்லி சட்டமன்றத்தில் வெடி குண்டு வீச்சு சம்பந்தமாகப் போலீஸார் பலரைக் கைது செய்தனர். தவிர லாகூரில் வெடிகுண்டு தயாரிப்புப் பட்டறையை நடத்தியதாகவும், மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் செய்தது பெரும் ராஜ துரோகமான செயலென்றும் காரணங்கள் காட்டி, இதில் பகத்சிங், கேஸ்வரதத் இருவரையும் குற்றவாளியாகச் சேர்த் தனர். ஏற்கெனவே வேறொரு வழக்கில் பலர் கைதாகி இருந்தனர். இதில் சுகதேவ், ராஜ குரு, விஜய குமார் சிங் மூவரும் பகத்சிங்குடன் சேர்ந்தனர். ராஜத் துரோகக் குற்ற விசாரணைகள் கோர்ட்டிற்குக் கொண்டு வராமல் சிறைக்குள்ளேயே நடந்தது. விசாரணை யைக் கவனிக்கப் பொதுமக்களை விடா மல் சில குறிப்பட்டவர்களே விசேஷ அனுமதியின்பேரில் வரமுடிந்தது. ஆனால் பகத்சிங் இந்த விசாரணை பப்ளிக் கோர்ட்டில் நடந்தால் மக்கள் பார்த்து, இதனால் அவர்கள் வெளியில் பிரச்சாரங்கள் செய்ய முடியும் எனக் கருதி அவன் மீண்டும் சிறைக்குள் போராட்டங்கள் நடத்தினான். கடைசி யில் சர்க்கார் சிறைக்குள் நடக்கும் விசாரணையைப் பொதுமக்கள் எவ்விதத் தடையுமின்றி பார்க்க அனுமதித்தது.

ஒவ்வொரு நாளும் விசாரணையின் போது பொதுமக்கள் திரண்டு வந்து, விசாரணையை நேரில் கண்டு, மனக் கொதிப்பும் அடைந்தனர். கைதிகளை விலங்கு இட்டபடியே சிறைக்குள் உணவு அருந்துவது, நீதி விசாரணையிலும் விலங் குடன் வரவேண்டும் என்ற உத்தரவுகளை யெல்லாம் பகத்சிங் தீவிரமாக எதிர்த் தான். தேசத்துரோகக் குற்றவாளிகளின் ரகசியங்களை அறிய அரசு, அக்குற்ற வாளிகளில் சிலரை சர்க்காருக்குச் சாதக மாகப் பயன்படுத்தி அவர்களுக்குச் சலுகை காட்டி, இதர குற்றவாளி களின் ரகசியங்களை அறிவது வழக்கம். இந்நிலையில் ஜெய்கோபால் என்ற குற்ற வாளி தனது நண்பர்களைக் காட்டிக் கொடுக்கும் 'அப்ரூவராக' (அநுகூலசத்ரு) மாறி பகத்சிங், மற்றும் அவனுடைய நண் பர்களின் ராஜத் துரோகச் செயல்களை வெளிப்படுத்தினான். விசாரணையில் பல திடுக்கிடும் சம்பவங்கள் வெளிப் பட்டன. எல்லாக் குற்றங்களிலும் பகத் சிங்கின் புரட்சிச் செயல்களே காரணமாக இருந்ததோடு, இவனுக்குத் துணையாக ராஜகுரு, சுதேவ் ஒத்துழைத்தது ருசுவாகி யது. பகத்சிங், மற்றும் இரு நண்பர்கள் எவ்வளவு எதிர்த்து வாதாடியும், இவர் களின் வாக்கு மூலங்கள்எடுபடவில்லை. இதைப்பற்றி பகத்சிங் கவலைப்படவே இல்லை.

1930 அக்டோபர் 4-ந் தேதி பகத்சிங், மற்றும் அவனது சகாக்கள் தங்கியிருந்த இடத்திற்கு கோர்ட்டிலிருந்து தீர்ப்பு வந்தது. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இம் மூவருக்கும் தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பு கூறப்பட்டது. தீர்ப்பைக் கேட்டு பகத்சிங் எக்களித்தான். அவனது நண்பர்களும் கைகொட்டி நகைத்தனர். தீர்ப்பை எதிர்த்து பகத்சிங் லண்டன் மாநகரிலுள்ள பிரீவிகௌன் சில் கோர்ட்டிற்கு அப்பீல் செய்தான். அப்பீல் மரண தண்டனையை எதிர்த்து அல்ல! இந்தியாவில்புரட்சியை ஆங்கிலே யர்கள் நன்கு அறியவே, இந்த அப்பீல் கடைசியில் அங்கு அப்பீலில் கீழ் கோர்ட்டுத் தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்தது.

சில ஆங்கிலேய அதிகாரிகள், இம் மூவரிடம் கவர்னர் ஜெனரலுக்கு விசேஷ கருணை மனு அனுப்புங்கள். உங்கள் தூக்குத் தண்டனை ரத்தாகும் என்பதற்கு பகத்சிங், 'எங்கள் மீது பல குற்றங்கள் கூறப்பட்டுள்ளன. தவிர பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியை எதிர்த்துப்போர்தொடுத்ததாய்எங்கள் மீது ராஜத் துரோகமும் சாட்டப்பட்டுள்ளது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே நாங்கள் தேசத்துரோகக் குற்ற வாளிகள்! நாங்கள் பாரத நாட்டுக்காரர்! நாங்கள் பிறருக்கு இரக்கம் காட்டுவோமே தவிர, நாங்கள் இதுவரை இரக்கம் கேட்ட தில்லை. நாங்கள் மூவரும் உங்களிடம் இரக்கம் பிச்சை கேட்கப்போவதில்லை. எங்களைத் தூக்கு மேடைக்கு அனுப்பு வதை விட உங்களிடமுள்ள பீரங்கி வாயில்கள் முன்போ, அல்லது துப்பாக்கி முனைகள் முன்போ நிறுத்தியோ, சுட்டுத்



**★ குடிப்பழக்கம் நம் நாட்டிலிருந்து அகலுவதற்குச் சமூக ஊழியர்களும், சிறப்பாகப் பெண்கள் அனைவரும் மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும்.**

**★ போதைப் பொருள்களின் முழு ஒழிப்பிற்காகச் சூறாவளிப் பிரச்சாரம் செய்வதைப் புனிதமான கடமையாகக் கொள்வீர்களாக!**

**★ மதுவை ஒழிப்பதற்கு மருத்துவர்கள் சரியான வகையில் உதவக் கூடும். இந்தச் சீர்திருத்தம் செய்வதில் பெண் களுக்கும் - மாணவர்களுக்கும் சிறப் பான உரிமையுண்டு.**

# அறிவியல் விந்தை

## நுண்ணலை துணி உலர்த்தி

**து**ணியை வெயிலில் காயப்போட்டு உலர்த்துவார்கள். அந்தத் துணியை உலர்த்துவதற்கு 'மின்துணி உலர்த்தி' என்ற கருவியும் பயன்படுகிறது. வெப்ப வாயுவின் உதவியாலும் துணியை உலர்த்தும் முறையும் இருக்கிறது. தற்போது 'நுண்ணலை துணி உலர்த்தி' (Micro Wave Dryer) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மேக்னட்ரான் என்ற வேதியியல் பொருளிலிருந்து நுண்ணலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவை தண்ணீரின் மூலக் கூறுகளை ஆவியாக்கித் துணியிலிருந்து வெளியேற்றிவிடுகின்றன. ஆகையால், துணி உலர்ந்து விடுகிறது.

மின்துணி உலர்த்தி, 66 டிகிரி செல்ஷியஸ் வரை, துணியைச் சூடேற்றிச் செயல்படும். இதன் காரணமாகச் சில வகை உயர்ந்த துணிகள் பாழாகிவிடும். ஆனால் நுண்ணலை துணி உலர்த்தி, 38 டிகிரி செல்ஷியஸ் வரையே செயல்படும். அதை 32 டிகிரி செ. வரை குறைக்கலாம். ஆகையால், எந்த வகை மென்மையான துணியையும் இது பாதிப்பதில்லை. அது மட்டுமல்ல.

மின்துணி உலர்த்திக்குத் தேவைப்படும் மின்சாரத்தில், 25 டிகிரி குறைவான அளவே இதற்குப் போதும். இதற்கு முன்பு, இப்படிப்பட்ட ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால், அது வெற்றி பெறவில்லை. தற்போது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள கொர்ரிங் அறிவியல் ஆராய்ச்சியகமும், வெப்ப ஆற்றல் கழகம் என்ற மற்றொரு நிறுவனமும் இணைந்து இந்தப் புதுக் கருவியைக் கண்டுபிடித்திருக்கின்றன. இன்னும் மூன்றாண்டுகளுக்குள் இது விற்பனைக்கு வரும்.

இதைப் போன்ற 'நுண்ணலை அடுப்பும்' அமெரிக்காவில் உள்ளது. அது மக்களிடையில் பரவலாகப் பயன்பட்டு வருகிறது.

## செயற்கைத் தோல்!

**அ**றுவை மருத்துவம் நடக்கும்போது, வேறு ஒருவருடைய இரத்தம் பயன்படுகிறது. கண் சீர் கெட்டுவிட்டால், மற்றொருவரின் கண் பொருத்தப்படுகிறது. ஆனால், ஒருவருடைய உடம்பிலுள்ள மேல் தோல் தீப்புண்ணால் கரிந்து விட்டால், இன்னொருவருடைய தோலை எடுத்துப் பொருத்த முடிவதில்லை. இது தீப்புண் ஆற்றும் மருத்துவர்களுக்குத் தொல்லை தருவதாக இருக்கிறது. வேறு ஒருவருடைய தோலை எடுத்துத் தீப்புண்பட்டவரின் உடம்பில் வைத்து மருத்துவம் செய்ய முயன்றால், அதை, அந்த உடம்பு ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கிவிடுகிறது.

உடம்பின், சிறு பாகத்தில் தீப்புண் ஏற்பட்டுவிட்டால், அந்த உடம்பின் மற்றொரு பகுதியிலிருந்து கொஞ்சம் தோலை எடுத்து எரிந்து போன பாகத்தில் வைத்து மருந்திட்டால் அது விரைவில் ஆறிவிடுகிறது. ஆனால், உடம்பில் பாதி அளவுக்குத் தோல் எரிந்து விட்டால், அவரைக் காப்பாற்றவே முடியாது.

ஆகவே, இப்படிப்பட்டவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஆய்வு நடந்து வருகிறது. அதன் விளைவாகச் செயற்கைத் தோல் உருவாக்கப்படும் நிலை இப்போது இருக்கிறது. அந்தச் செயற்கைத் தோலை எந்த உடம்பும் ஏற்றுக் கொள்ளும். இதனால், வருங்காலத்தில் பலருடைய உயிரைக் காப்பாற்ற முடியும்.

## நிலா வண்டி

**எ**ட்டு சக்கரங்கள்; ஏறக்குறைய கிராமத்து மாட்டு வண்டி போன்ற உருவமைப்பு; நண்டின் கால்போன்ற பிடிக்கும் உறுப்புகள்; குத்தூசி போன்ற சில பகுதிகள் - இப்படி, இவற்றைக் கொண்ட வண்டி ஒன்று தற்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. அது பூமியில் ஓடாது, நிலவில் ஓடப்போகிறது. அதை 'நிலா வண்டி' என்று சொல்லலாம். நிலாவிற்குச் செல்லப்போகும் விண்வெளி வீரர்கள், இதில் ஏறிக் கொண்டு அங்கே சுற்றிவரப் போகிறார்கள்.

இந்த வண்டி மேலும் பல தனிச் சிறப்புகளைக் கொண்டது. இது அழுத்தம் தாங்கக் கூடியது. கதிர்வீச்சு, மிகு வெப்பம், ஆகியவற்றைச் சமாளிக்கும் தன்மை உடையது. எவ்வித அதிர்ச்சிக்கும் ஈடுகொடுக்கக் கூடியது.

முன்பு ஒரு வண்டி நிலாவில் ஓடியது. அதில் சில குறைபாடுகள் இருந்தன. அவை, இந்தப் புதிய வண்டியில் நீக்கப்பட்டன. இந்த வண்டி ஆறு மாதம் வரை இயங்கும். இது 1999-ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- டாக்டர் மலையமான்.

---

தள்ளுங்கள்! நாங்கள் மகிழ்ச்சியோடு செல்லுகிறோம். இதனைத்தான் நாங்களும் மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். மிக விரைவிலேயே முன்பு 1857-இல் நடந்த 'இந்திய சுதந்திரப் போர்' மறுபடியும் வர இருக்கிறது. அதில் சத்தியமும் நேர்மையும் ஜெயிக்காவிடில் அத்துடன் அப்போர் நின்று விடாது. தொடர்ந்து நடக்கும். எங்களோடு இந்தப் போராட்டம் நின்றுவிடாது. தொடர்ந்து நடக்கும். இன்றைய நிகழ்ச்சி நாளைய வரலாறாக அமையும்! நாங்கள் எங்கள் கடமையைச் செய்து விட்டோம் ("I have done my duty to the Country") நாங்கள் பாரத தேசச் சுதந்திரத்திற்காக உயிர் துறப்பதைக் கௌரவமாக நினைக்கிறோம். தண்டனையை நிறைவேற்றுங்கள்" என்று கர்ஜித்தான்.

1931-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் நாள் மாலை 6 மணி! பாரத நாட்டு விடுதலைக்காகத் தனது வாழ்நாட்களை அர்ப்பணித்த மாவீரன் பகத்சிங், அவனது இரு நண்பர்களான ராஜகுரு, சுகதேவ் 'புரட்சி வாழ்க!' 'ஏகாதிபத்தியம் ஒழிக!' 'மக்கள் ஆட்சி வாழ்க!' என்ற கோஷங்களுடன் தங்களுக்காக அலங்கரிக்கப்பட்ட தூக்குமேடையில் ஏறி நின்று தூக்குக் கயிற்றுக்கு முத்தமிட்டனர். இரவு சுமார் 7½ மணிக்கு அம் மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது!

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து, நம் பாரத தேசத்தை மீட்கப் புரட்சி செய்து வீர மரணம் அடைந்த பகத்சிங்கை, இளைஞர்களிடம் புரட்சிக் கனலை ஏற்படுத்திய தலைவனை, புரட்சியின் சின்னமாகிய எரிகின்ற தீப்பந்தத்துடன் (Torch) ஒப்பிட்டு அவ்வீரனுடைய சிலையையும் கையில் தீப்பந்தத்துடன் அமைத்து இன்றும் 'காஜியாபாத்' மக்களின் தியாக உணர்வையும், நன்றி மறவாத தன்மையையும் பிரதிபலிக்கச் செய்து, இளைஞன் பகத்சிங் ஜீவிய சிலையாக நிற்கிறான்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

